# வைரவிழா சிறப்புமலர்




## 21/08/2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# ஷாரு

# தொலைத் தொடர்பு நிலையம்



**123, கண்டி வீதி, அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இல:**

**உள்நாடு 021 4590566**
**வெளிநாடு 0094-214590566**

**[illegible] அழைப்பும் உண்டு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப் பதிப்பு

# தயா அச்சகம்

கொம்பியூட்டர் ஓவ் (f) செற் பிறின்டேர்ஸ்

**DAYA PRINTERS**

*Computer Offset Printers*

**138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(நாவலர் பாடசாலை முன்பாக) T.P 222 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி சனசமூக நிலையம்



# வைரவிழா சிறப்பு மலர்

## 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்மீட்புக்காகப் போராடி உயிர்நீத்த

அனைத்து மாவீரர்களுக்கும், உள்நாட்டில்

நடைபெற்ற யுத்தங்கள் காரணமாக உயிர்நீத்த

அனைத்துப் பொதுமக்களுக்கும் இந்நூலை

சமர்ப்பிக்கின்றோம்.

**நாவற்குழி பாரதி சனசமூக நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

- தமிழ்மொழி வாழ்த்து
- தலைவரின் வாழ்த்துரை i
- முன்னாள் தலைவரின் இதயத்திலிருந்து ii
- சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளரின் ஆசிச்செய்தி iii
- அதிபரின் ஆசியுரை - யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் iii
- விவசாய சம்மேளனத் தலைவரின் வாழ்த்துரை iv
- நாவற்குழி கிழக்கு கிராம அலுவலரின் ஆசியுரை iv
- வைரவிழா நயப்புரை v
- பாரதி சனசமூக நிலையத்தின் வரலாறு vi
- **இதழின் இதயத்தினுள்**
  - சமூக நிறுவனங்களுள் நூலகம் 1
  - தடம் மாறிச் செல்லும் யௌவனம் 3
  - அறிவியல் பார்வையில் சுனாமி (Tsunami) 6
  - THE PROBLEMS YOUTH FACE 8
  - கவிதை - நாளைய உலகு 9
  - விந்தைமிகு விண்வெளித் தகவல்கள் 10
  - பொது அறிவு 13
  - அறிவியல் குறிப்புக்கள் 14
  - Cats 15
  - ஒரு கவிஞனின் குமுறல் 16
  - குழந்தை உள்ளம் படைத்த பாரதி 17
  - பொன்மொழிகள் 17
  - சமூக மேம்பாடும் சனசமூக நிலையமும் 18
  - COMPUTER AND ITS USES 19
  - இலங்கையில் தோற்றம் பெற்ற தமிழ்ப் பத்திரிகைகள் 20
  - சிந்திக்கச்சில, மொழிகளும் சிறப்புப் பெயர்களும் 21
  - பெண்ணினத்தின் பெருமை 22
  - யாருக்காக அழுதான் (சிறுகதை) 23
  - SAVE THE ENVIRONMENT FROM POLLUTION 26
  - விடுகதைகள் 27
  - சிரிப்பின் இரகசியங்கள 27
  - சொல்லென்னும் சொல் 27
  - இனியும் நீ வரவேண்டாம் (கவிதை) 28
  - கணனி (Computer) 29
  - மறக்க முடியாதவர்கள் 30
  - நூல்களும் ஆசிரியர்களும் 30
  - சனசமூக வளர்ச்சிக்கு உதவியவர்கள் 30
  - சனசமூக நிலையங்களின் கணக்கீட்டு முறை 31
  - விளம்பரங்கள்
  - நன்றி கூறுகிறோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தண் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

-சுப்பிரமணியப் பாரதியார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தலைவரின் வாழ்த்துரை

நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தின் 60 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதில் அங்கத்தவர்களுடன் சேர்ந்து நானும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது நிலையம் 1945ம் ஆண்டு எமது பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது எமது நிலையத்திற்குக் காணியைத் தந்துதவிய காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை குடும்பத்தினருக்கு முதற்கண் நன்றி கூறுகின்றேன். இந்நிலையத்தை இடைவிடாது நடத்துவதற்கு உதவிய காலஞ் சென்ற பெரியோர்களுக்கும் தற்போது நிலையத்தை வழிநடத்துவதற்கு உதவும் அ.செ. தம்பிராஜா, த. செல்லத்துரை, S. பொன்னுத்துரை, அ.சிவராசா ஆகியோருக்கும் மற்றும் அங்கத்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

1965ம் ஆண்டு எனது வயது 14 அப்பொழுது தொடக்கம் நிலையத்தின் வளர்ச்சியில் ஈடுபட்டு எமது சமூகத்தை முன்னேற்றப் பல வழிகளிலும் பாடுபட்டு பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டு நிலையத்தை அழிய விடாது பாதுகாத்து வந்துள்ளேன். எமது நிலையத்தில் நான் 25 வருடங்கள் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளை மாறி மாறி வகித்து வந்துள்ளேன். இப்பொழுதும் 1999ம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின்பும் மீளக்குடியமர்வு 2001ம் ஆண்டிற்குப் பின்பும் நிலையத்தை இயங்க வைக்க சில அங்கத்தவர்களுடன் வாலிபர்களின் ஒத்துழைப்பால் பாரதி சனசமூக நிலையம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மேலும் இம்மலரை அச்சிட உதவிய அச்சகத்தினருக்கும், அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் எமது அங்கத்தவர்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மென்மேலும் பாரதி சனசமூக நிலையம் செழித்தோங்க எனது வாழ்த்துக்கள்.

நன்றி

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு"

"மக்கள் சேவையே மகேசன் சேவை"

**இ. சிவானந்தம்**

தலைவர்

பாரதி சனசமூக நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# முன்னாள் தலைவரின் இதயத்திலிருந்து...

யாழ் /நாவற்குழி பாரதி சனசமூக நிலையம் தனது அறுபதாவது அகவையை ஒட்டி வைரவிழா சிறப்புமலர் வெளியீட்டுக்கு அதனை வாழ்த்தக் கிடைத்ததிற் காக மகிழ்வுறுகின்றேன்.

1947 ம் ஆண்டு பிறந்த எனக்கு "சிவலிங்கம்" என்ற பெயர் சூட்டு விழா இச்சனசமூக நிலையத்திலேயே நிகழ்ந்தது என்றால் இந்நிலையத்தின் அங்கத்தவர்களின் உணர்வு மிகுந்த பங்களிப்பு எவ்வளவு பெருமைக்குரியதாகும். பாரதியாரின் "ஓடிவிளையாடு பாப்பா" என்ற பாடலின் ஒவ்வொரு வரிகளின் கருத்திற்கேற்ப, நானும் எனது சகோதர சகோதரிகளும் மற்றும் நிலைய அங்கத்தவர்களின் பிள்ளைகளுமாக எல்லோரும் நிலையத்தில் ஒன்றுகூடி, விளையாடி, கல்வி பயின்று பொறியியலாளர்களாகவும், டாக்டர்களாகவும், பட்டதாரிகளாகவும், பாடசாலை அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும், அரச சேவை உத்தியோகத்தர்களாகவும், சிறந்த விவசாயிகளாகவும் உருவாக்கிய பெருமை இச்சனசமூக நிலையத்தையே சாரும்.

**"ஈன்ற பொழுதினில் பெரிதுவக்கும்**

**தன் மகனை சான்றோன் எனகேட்ட தாய்"**

என்ற வள்ளுவன் திருக்குறளில் குறிப்பிடப்பட்ட பெருமைக்குரிய தாய் இங்கு "பாரதி சனசமூக நிலையமே"

போர்க்காலச் சூழலில் இந்நிலையத்தின் தலைவராக பொறுப்பேற்று நிலையத்தைப் பாதுகாத்தேன். அதனைத் தொடர்ந்து வரும் தலைவர்களும், நிர்வாக உறுப்பினர்களும் நிலைய அங்கத்தவர்களும் இந்நிலைய வளர்ச்சிக்கும் ஆக்கப் பணிகளுக்கும் சிறப்புற சேவையாற்றுவார்கள் என மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**தம்பிஜயா சிவலிங்கம்**

உள்ளூராட்சி வேலைகள் அத்தியட்சகர்

நகரசபை சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளரின்

# ஆசிச்செய்தி

சாவகச்சேரி பிரதேசசபையின் நிர்வாகப் பிரதேசத்தில் தென்மராட்சி மேற்குக் கரையோரத்தில் நாவற்குழியில் 1945 முதல் இயங்கி வருகின்ற பாரதி சனசமூகநிலையம் தனது 60 வது ஆண்டு நிறைவு விழாவை வைரவிழாவாகக் கொண்டாடுவதையிட்டு நான் பூரிப்படைகின்றேன்.

யுத்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு நீண்டதொரு இடப்பெயர்வின் பின்னர் மீளக்குடியமர்ந்து தமது தனித்தனிக் கஷ்டங்களின் மத்தியிலும் பொதுப்பணிகளில் முன்னிலையில் நிற்கும் பாரதி சனசமூக நிலையத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்தச் சனசமூக நிலையம் மேலும் வளர்ச்சி பெற்று அப்பிரதேச மக்களின் வசதிகள் வளம்பெறத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு எல்லாம்வல்ல ஆண்டவனின் திருவடிபணிந்து, எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**ந.பாலசந்திரன்,**
**செயலாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை**



# அதிபரின் ஆசியுரை

பாரதி சனசமூக நிலையம் தனது 60 வது அகவையை பூர்த்தி செய்யும் நிலையில் சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். போரின் கொடுமைகாரணமாக இழந்த உறவுகள், நொந்துபோன உள்ளங்கள், வனாந்தரமாகிவிட்ட நாவற்குழிப் பிரதேசம், அகதிகளாக அலையும் எம்மவர் போன்ற கரடுமுரடான சூழலுக்குள் மீண்டும் எழுவோம் என உறுதிகூறி துளிர்க்கும் பிஞ்சு உள்ளங்களின் விடாமுயற்சியை பாராட்டி வாழ்த்துகின்றேன். இத்தகைய முயற்சிகள் எமது எதிர்காலத்தை வளப்படுத்தும் கடந்தகாலத்தை நினைவூட்டும். இந்த வகையில் பாரதி சனசமூக நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கன்னி முயற்சிவெற்றி பெற இறைவனின் அருளாசிகளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**வாழ்க நும் பணி, வளர்க எம் பிரதேசம்**

நன்றி

**திருமதி. வ. மேகலிங்கம்**
**அதிபர்**
**யா/ நாவற்குழி ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



புரட்சிக்கவிஞன் பாரதியின் நாமங்கொண்டு நாவற்குழியில் சிறப்புற இயங்கிவருகின்ற சனசமூக நிலையம் பாரதி சனசமூக நிலையமாகும்.

இச்சனசமூக நிலையம் இம்மக்களின் பல்வேறு சமூகநலத் திட்டங்களிலும் சமூகத்தினரின் விழிப்புணர்வை மேம்படுத்துவதிலும் இவர்களின் இருப்பினைப் பலப்படுத்தி ஒருங்கிணைத்து தங்கள் சமூகத்திற்குரிய பணிகளை சிறப்புறச் செய்து வருகின்றது.

அந்த வகையில் பாரதி சனசமூக நிலையம் கட்டிடவசதிகள், தளபாட வசதிகள், மற்றும் சேவைகளினை தங்கள் சனசமூக நிலையத்திற்கு ஏற்ற அளவிலே செய்து சிறப்புற இயங்கிவந்து இன்று வைரவிழாக் கண்டு புதுப்பொலிவு பெற்று நிமிர்ந்து நிற்கின்றது.

இத்தகைய சிறப்பினை அடைவதற்கு உழைத்து வந்த நிலைய நிர்வாகத்தினரும் நிலைய சமூகத்தவரும் வாழ்த்தப்பட வேண்டியவர்கள்.

மேலும் இன்று அகவை அறுபதை பூர்த்தி செய்து புதிய பாதையில் வெற்றிநடை போடுகின்ற பாரதி சனசமூக நிலையம் இனிவரும் காலங்களில் பாலர்கல்வி, விளையாட்டுத்துறை, கணனிக்கல்விப் பயிற்சி வழங்கல் என மேன்மேலும் வளர்ச்சி பெற்று வளர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**தி. தங்கவேலு**
**தலைவர்**
**விவசாயிகள் சம்மேளனம்**
**நாவற்குழி கிழக்கு**
**கைதடி.**

05/08/2005

---

## கிராம அலுவலரின்
# ஆசியுரை



நாவற்குழி சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அறுபதாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இந்நாளில் இச்சனசமூக நிலையம் கடந்த காலத்தில் கிராமத்தின் தேவைகளை இனங்கண்டு உரிய இடங்களுக்கும் எடுத்துச் சென்று மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்துள்ளதுடன், கிராமத்தின் அபிவிருத்திக்கு என்னுடன் இணைந்து செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சிரமதானப் பணிகள், சமயப் பணிகள், கல்விப் பணிகள் ஆகியவற்றில் அரிய சேவைகளை ஆற்றி வந்துள்ளது. இதில் பல தலைவர்கள் நிர்வாகிகள் அரும்பாடுபட்டுள்ளனர். சிலர் இன்று இல்லாதவிடத்தும் அவர்களின் வழிநடத்தல்கள் சமூகத்திற்கு அளப்பரிய சேவையாக அமைந்துள்ளதை அறுபதாவது ஆண்டு நிறைவில் நிலைநிறுத்தி நல்வழி செல்ல இறைவன் அருள்புரிய வேண்டுகின்றேன்.

**ஆ .நடராசா**
**கிராம அலுவலர்**
**நாவற்குழி கிழக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைரவிழா நயப்புரை

இன்று வைரவிழாக் காணும் நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தின் வளர்ச்சியையும் செயற்பாடுகளையும் அவதானித்து நாங்கள் யாபேரும் பெருமிதமடைகிறோம். இதன் அளப்பரிய சேவை பாராட்டற்குரியது. தொடர்ச்சியான செயற்பாடுகளில் எவ்வளவோ ஒற்றுமையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றிய செயற்குழுக்களின் மனஉறுதியும் விடாமுயற்சியும் போற்றற்குரியன. பல இன்னல்கள் மத்தியிலும் பல முன்னேற்றங்கள் அடைந்துள்ளமை நினைவு கூரற்பாலது: கடந்த 60 ஆண்டுகள் நிலையம் ஆற்றிய பணிகள் மதிக்கப்படவேண்டியன. இளைஞர்களின் ஊக்கமும் பெரியோரின் ஆதரவும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் இணைந்த தொழிற்பாடே இவ்வளவு காலம் திறம்படச் செயலாற்ற வாய்ப்பாக இருந்தது.

இந்நிலையம் 1945 ஒரு வாசிகசாலையாக (Reading Room) நாவற்குழிக் கிராமத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று புதினப்பத்திரிகை, சஞ்சிகை போன்றவற்றை மக்கள் வாசித்து உலக அறிவைப் பெறும் நோக்குடன் இயங்கியது. ஆனால் அரசின் மறுசீரமைப்பின் பிரகாரம் வாசிகசாலைகள் சனசமூக நிலையங்களாகப் பெயர் மாற்றம் பெற்றதுடன் தொழிற்பாடுகளை விரிவுபடுத்தி மென்மேலும் வளர்ச்சிபெற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

**பொ. சுப்பையா J.P**
(முன்னாள் தலைவரும் தற்போதைய உபதலைவரும்)
நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாரதி சனசமூக நிலையத்தின் வரலாறு



"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விசாலைகள் வைப்போம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்
காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல கலை வளர்ப்போம்"

என்ற பாரதியாரின் எண்ணத்திற்கிணங்கவும் "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்ற பொன்மொழிக்கிணங்கவும்.

எமது பாரதி சனசமூக நிலையம் 15.07.1945 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது அமைக் கப்பட்ட காலப்பகுதியில் மக்களிடையே பத்திரிகை வாசிக்கும் பழக்கம் இல்லாதிருந்த காலப்பகுதி. சமுதாயத்திலே மூடப்பழக்க வழக்கங்கள் சாதிப் பிரச்சினைகள், உயர்ந்தவன், தாழ்ந்தவன் தீண்டா மை போன்றவற்றைச் சமுதாயத்திலே களை யெடுக்கின்ற பாசறையாக அமைக்க வேண்டும். நல்ல நோக்கம் நற்பெரியார்களான அமரர்கள் சு. இராசையா, அ. சின்னத்தம்பி, சி. தம்பையா என்போரும், இப்பொழுது எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களான, அ.செ.தம்பிராசா, த.செல்லத்துரை இவகளின் பெரும் முயற்சியின் பயனாக இப்போது நிலையம் இருக்கும் இடத்தில் ஓலைக் கொட்டிலாக இருந்த நிலையத்தை நாவற்குழியூர் க.செ.நடராசன், பண்டிதர் சு.வேலுப் பிள்ளை, க.வ.தியாகராசா, இ.பஞ்சரத்தினம் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ந் திகதி கொழும்பு மத்திய தொகுதி 3வது பாராளுமன்ற உறுப்பினர் பீட்டர் கெனமன். இ.இ.பூபாலசிங்கம் (புத்தகசாலை அதிபர்) அ. வைத்திலிங்கம் (B.A உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர்) மூ.கார்த்திகேசன் (B.Aஅதிபர்) மு.க.சுப்பிர மணியம், ஆர். இராமநாதன் (தேசாபிமான பத்திரிகை ஆசிரியர்) ஆகியோர் களை அழைத்துச் சிறப்புக் கூட்டங்களை நிலைய முன்றலில் நடத்தினோம்.

1948ம் ஆண்டு ஆவணி மாதம் இந்தியாவைச் சேர்ந்த ப.ஜீவானந்தம் (தாமரை பத்திரிகை ஆசிரியர்) அவர்களை அழைத்து கம்பயன்வயல் மைதானத்தில் "தமிழரின் வருங் காலம்" என்னும் தலைப்பில் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்தினோம்.

1969 ஆம் ஆண்டு தைமாதம் நெல் அறுவடைகாலம் வந்தது நிலைய அங்கத்தவர் கள், உறுப்பினர்கள், பெரியோர்கள், எல்லோரும் கூடிக் கதைத்தார்கள். வயல் சொந்தக்காரரிடம் பொருத்தம் பேசி நெல் அறுவடை செய்து அதன் மூலம் கூலியைப் பெற்று கொட்டிலில் இயங்கும் சனசமூக நிலையத்தைக் கற்களால் கட்டிவிடலாம் என்றும் தீர்மானித்தார்கள்.

க.முருகையா, சி.அருள்மோகன், ந.சிவஞானம், இ.சிவானந்தம், த.சிவலிங்கம், க.சதாசிவம், க.கனகராசா, வ.இலட்சுமணன், த.விஜயானந்தன் மற்றும் அமரர்களான இ.நல்லையா, செ. கருணாநிதி, த.கணேசராசா இவர்கள் ஆற்றிய பணி அளப்பரியது. இப்போது இருக்கும் கட்டிடம் இவர்கள் முயற்சியில் நிர்மாணிக்கப்பட்டது.

இன்னொரு அங்கமாக பாரதி விளையாட்டுக் கழகம், மற்றும் நாவற்குழி கிராம முன்னேற்றச் சங்கம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் போன்ற அமைப்புக்களுடன் சேர்ந்து கிராம அபிவிருத்திக்கு எம்மை அர்ப்பணித்து வருகிறோம்.


அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

**அ.கனகலிங்கம்**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகசபை உறுப்பினர்கள் 2005



**இடமிருந்து வலம் இருப்பவர்கள்**
செ. ஜெகபாலன் (நி.உ), ந. இந்திரன் (நி.உ), பி. பிரதீபன் (பொருளாளர்), அ. கனகலிங்கம் (செயலாளர்)
இ. சிவானந்தன் (தலைவர்), த செல்லத்துரை (நி.உ), அ. சிவராசா (உபதலைவர்), சி. பொன்னுத்துரை (நி.உ)
ந. இராஜதீபன் (நி.உ)

**இடமிருந்து வலம் நிற்பவர்கள்**
க. ரவீந்திரராஜா (நி.உ), க. வசீகரன் (நி.உ), இ. சுகிர்தன் (நி.உ), ச. உமேஸ் (நி.உ), க. மனோகரன் (நி.உ), இ. சுவீந்தன் (நி.உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலகப்பகுதி



பத்திரிகைப்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகநிறுவனங்களுள் நூலகம்

சமூகத்தின் மாதிரிச் சிற்றுருவங்களே சமூக நிறுவனங்களாகும். மனிதத்தன்மையை அடிப்படையாகக்கொண்டே இந்நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. உண்மையாகச் சொல்வ தெனில் ஒரு நிறுவனத்துள் அடங்கியதே ஒரு சமூகமாகும். அப்படியான ஒரு பண்புள்ள சமூக அமைப்பே நாடுகளில் நின்று நிலைத்திருக்க முடியும். சமூக நோக்குடன் செயற்படுபவையே சமூகநிறுவனங்களாகும்.

சமூகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் இனம், மதம், மொழி என்ற பேதம் நீக்கி சேவையாற்றுகின்ற அனைத்து ஸ்தாபனங் களையும் சமூகநிறுவனங்கள் என்று வரையறை செய்யலாம். இந்த சமூக நிறுவனங்கள் சர்வதேச ரீதியாகவும் நாடுகள் நகரங்கள் வாரியாகவும் கிராமங்கள் வாரியாகவும் காணப்படுகின்றன. தான் இயங்கும் சமூகத்தில் காணப்படும். ஒழுக்க நியதிகள், வாழ்க்கை விழுமியங்கள் ஆகியவற்றை அங்கீகரிப்பதாய் அவற்றைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் அக்கறை உடையதாக சமூக நிறுவனங்கள் தொழிற்படுகின்றன.

சர்வதேச ரீதியாகக் காணப்படுகின்ற சமூக நிறுவனங்கள் உலகில் வாழும் பல்வேறுபட்ட மக்களுக்கும் பொதுப்படையான சில உதவிகளை நல்கி வருகின்றன. உலகில் பிறந்துள்ள ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் ஒரு சமூக நிறுவனத்தின் அங்கத்தவனாகக் காணப்படு கின்றான். அவன் அங்கத்துவம் வகிக்கும் குடும்பம் முதலாவது சமூக நிறுவனமாகும். சமூகத்தில் வாழ்வதற்கு வேண்டிய அடிப்படைப் பண்புகளை அவன் தனது குடும்பத்திலிருந்து பெற்றுக் கொள்கிறான்.

அடுத்ததாக மனிதன் பங்குகொள்ளும் பாடசாலை ஒரு சமூக நிறுவனமாகும். தனி மனிதனின் நாளாந்தப் பிரச்சினைகள் அனைத்தும் கொண்ட சமூகமே பள்ளிக்கூடமாகும். பள்ளி ஆசிரியரும் படிக்கும் மாணவனுக்கும் இரு பகுதியினரும் இணைந்து சமூக இயக்கங்களில் பங்குபற்றுகின்றனர். பாடசாலைக் கட்டிடங்களைக் கட்டுவதிலும் நூல்நிலையங்களை அமைப்பதிலும், பள்ளிக்கூடங்களில் பொருட்காட்சிகளை ஒழுங்கு செய்வதிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் பரிசளிப்பு விழாக்களிலும் பாடசாலைக்கு வெளியே இடம் பெறும் வேலை அனுபவத்திட்டத்திலும் பெற்றோர்களும், மற்றோர்களும் பங்கு கொண்டு தம்மால் முடிந்த உதவிகளைச் செய்கின்றனர். இதனால் சமூகம் சமூக நிறுவனங்களுக்குள் ஊடுருவிப் பணியாற்றுகின்றது.

சமூக நிறுவனங்களைப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காகப் பல்வேறு வழிகளில் பயன்படுத்த முடியும். ஒரு மாணவன் தான் வாழப்போகும் சமூகம் எதிர்பார்க்கும் ஒழுங்குகளுக்கேற்ப தனது நடத்தையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியவனாகின்றான். தான் வாழும் சூழலுடன் பொருத்தப்பாடுடையவனாக மாற வேண்டும். சமூகம் ஏற்றுக் கொள்கின்ற மரபு, வழக்காறு, சட்டதிட்டம், சம்பிரதாயம், சமூகத்தினுடைய குணவியல்பு என்பவற்றை பிள்ளை பெறுவதற்கு சமூகநிறுவனங்கள் வழிவகுக்கின்றன. தனிப்பட்ட ஒருவரை அவர்சார்ந்த குழு எதிர்பார்க்கும் ஒழுங்குகளுக்கமைய அவருடைய நடத்தையை மாற்றும் முகவர்களாக சமூகநிறுவனங்கள் தொழிற்படுகின்றன. தனியொருவனின் ஆளுமை யை விருத்தி செய்வதிலும் சமூக நிறுவனங்கள் துணைபுரிகின்றன. ஒரு சமூகத்தில் வாழ்வதற்கு அவசியமான அறிவு ஆற்றல், மனப்பான்மை, நியமம், பெறுமானம் ஆகியவற்றை ஒருவர் சமூகநிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள லாம். சகல சமூக நிறுவனங்களும் குடும்பத்தை மையாமாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன.

சிறு குழந்தை முதன்முதல் குடும்ப அங்கத்தவராகி அவர்களின் நெறிமுறைகளின் செல்வாக்கிற்காளாகின்றது. அதன் பின் அயற் குடும்பங்கள் தொடர்ந்து சமவயதுக் குழுக்கள், பின்பு பாடசாலை வகுப்புக்கள் தொடர்ந்து சமய சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதிக்கத்திற் குள்ளாகின்றது. சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதிக்கத்திற்குள்ளாகின்றது. சமூக நிறுவனங்கள் சமூகத்திற்குப் பல்வேறு பணிகளை ஆற்றுகின்றன. சமூக உறுப்பினர்கள் ஒவ்வொரு வரும் தத்த மக்குரிய கடமைக் கூறுகளை நிறைவேற்றப் பயிற்சியளிக்கிறது. சமூக உறுப்பினர்கள் அனை வரும் அனுசரிக்க வேண்டிய அடிப்படைப்பழக்க வழக்கம் உணவுண்ணல் சுகாதாரப் பழக்கங்கள் முதியோரைக் கனம் பண்ணுதல் பருவமடைந்த பின் சமூகத்தில் வாழப் பயிற்சியளித்தல் போன்ற செயற்பாடுகளை இந் நிறுவனங்கள் ஆற்று கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தின் மூலாதாரமான சமூக நிறுவனங்களில் குடும்பமும் மிக முக்கியமான தாகும். கல்வியை வழங்கும் நிறுவனங்கள் பல்கிப் பெருகிக் காணப்பட்டாலும் இன்றும் குடும்பம் முக்கியத்துவம் பெறுகிறது. பாடசாலை செல்லும் வயதடையுமுன் குடும்பத்திலேதான் தனதுஆரம்ப அடிப்படைக் கல்வியைப் பெறு கின்றது. மனிதனை உருவாக்கும் ஒரு தொழிற் சாலையே குடும்பமாகும். குடும்பம் என்ற நிறுவனத்திலிருந்து குழந்தை அன்புகாட்டல், அன்பைப்பெறல், நட்பைப் பாராட்டல், பிள்ளைக் குரிய பாராட்டைப் பெறல், கல்விக்கடமை, ஓய்வுநேரப் பயன்பாடு போன்ற கடமைக் கூறுகளை அறிந்து கொள்கிறது. அன்பு, கருணை, நம்பிக்கை, பொறுமை, பரஸ்பர ஒத்துழைப்பு, தியாக மனப்பான்மை, ஆகிய பழக்கங்களைக் குடும்பம் என்னும் நிறுவனம் பிள்ளைகளிடம் ஏற்படுத்த முடியும். குடும்பமே மனித நாகரிகத்தின் ஆணி வேராகும்.

இந்தக் குணவியல்புகளின் அடிப்படையில் சமூக நிறுவனங்களுள் நூலகங்கள் ஆற்றுகின்ற பணி அளப்பரியதாகும். மக்களையும் சமூகத்தை யும் தொடர்புபடுத்தும் சாதனங்கள் பல அதில் முக்கியமானது நூல் நிலையங்கள் சிறந்த நூல் நிலையங்கள் ஆசிரியருக்கும் மாணவருக்கும் சமூகத்திற்கும் பெரும் உறுதுணையாகும். நூல் நிலையங்களில் பள்ளிக்கூடங்களில் போதிக்கப் படும் பாடங்களை மேலும் விரிவாக அறிவதற்குரிய துணைப்பாட நூல்கள். முதியோருக்குரிய பொது அறிவுக் கலைத்துறை, பொது சமுதாய விஞ்ஞானநூல்கள் இடம் பெறுகின்றன. மக்களின் இலக்கிய உணர்வு, சமூக நோக்கு, அறிவியல் மனப்பாங்கு, வளர்ச்சிபெற இந்நூல்கள் துணைபுரி கின்றன. ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் தங்கள் ஓய்வுநேரங்களைச் செவ்வனே கழிப்பதற்கு நூல்நிலையம் உதவுகின்றது.

ஒரு நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் அடிப்படைக் காரணிகளில் முக்கியமானது கல்வியாகும். சிறுவயது முதல் கல்வியில் நாட்டம் கொண்டு படித்து முன்னேறிய ஒரு சமுதாயம் பண்பட்ட சமுதாயமாகத் திகழ்வது இயல்பு. தனி மனிதனை அல்லது சமுதாயத்தை முழுமைப் படுத்தும் சாதனம் கல்வியாகும். அக்கல்வியைப் போதிக்கும் நிறுவனங்களில் பயிலும் மாணவர் களும், ஆசிரியர்களும், மற்றையோரும் தமது கல்வியைச் செவ்வனே மேற்கொள்ள உதவும் களமாக அந்நிறுவனங்களில் அமைந்துள்ள நூலகங்கள் செயற்படுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் கல்வி நிறுவனங்கள் தோற்றம் பெற்ற காலம் முதலாக அவற்றுடன் இணைந்தனவாக நூலகங்களும் வளர்ச்சிபெற்று வந்துள்ளன. காலப்போக்கில் நூலகவியற் கல்வியும் விருத்திபெறுவதாயிற்று நூலகவியலின் பல்வேறு துறைகளும் இன்றைய கால கட்டத்தில் அபிவிருத்தியடைந்துள்ளன. அதன் பயனாக கல்வி நிறுவன நூலகங்களும் நவீனமுறையில் வளர்ச்சி பெறுவது இயல்பே. ஒவ்வொரு கல்வி நிறுவனத்தின் தன்மைக்கும் அதன் சேவைக்கும், குறிக்கோளுக்கும் ஏற்ப நூலகங்களும் அமைந்து சேவையாற்றி வருகின்றன.

நூலகங்களில் நூல்கள் மட்டுமல்ல நூல் வடிவில்லாத ஆவணங்களும் எழுத்துச் சுவடிகளும் இடம் பெறுகின்றன. பிள்ளைகளைச் சமூகப் படுத்தும் நாளிதழ்கள், வார இதழ்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. பொறுப்புள்ள பத்திரிகைகள் சமூக, அற ஒழுக்கங்களைப் பேணுதலைத் தமது தலையாய கடனாகக் கொண்டு கடமை யாற்றுகின்றன. நாட்டிலுள்ள மக்களிற் பெரும் பாலானோரின் மனப்பாங்கை நாம் அறியவும் அதற்கேற்ப நடத்தைகளை மாற்றிக் கொள்ளவும் இவை துணைபுரியலாம்.

ஒரு நாட்டில் வாழும், மக்கள் தங்கள் தலைவர்களையும் அவர்கள் கொள்கைகளையும் நன்கு அறியவும் சமூகசேவை செய்வோர் போற்றப்படுவதை அறிவதற்கும் இவை வழி வகுக்கும் பிள்ளைகளை சமூகமயப்படுத்தல் நூல்களின் முக்கிய கடனாகும். பொதுவாக சமூக அறிவினை அளித்துச் சமூகப்பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளை நூல்கள் மக்களுக்கு அளிக்கின்றன. எனவே சமூக நிறுவனங்களுள் அடங்கும் நூலகங்களின் பயனை முழுமையாகப் பெற்று பயனடைவோமாக.

**திருமதி. வ.மேகலிங்கம்**
**அதிபர்**
**யா/நாவற்குழி ம.வி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறிச் செல்லும் யௌவனம்

மனித வாழ்க்கையை மூன்று பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள் அறிஞர்கள். பிள்ளைப் பருவம், யௌவனப்பருவம், முதுமைப்பருவம் என்று அழகாய்ப் பகுத்துப் பிரித்திருக் கிறார்கள். இந்தப் பருவங்களில் யௌவனப் பருவம் என்பது பெரும் பொக்கிசம். இன்னும் கூறப்போனால் மீதமிருக்கின்ற முக்கால்வாசி வாழ்க்கைக்கும் இதுதான் அத்திவாரம். உலகிலே யௌவனத்தைக் கடந்து வராத முதியவர்கள் எவருமே இல்லை. யௌவனப் பருவத்தில் தமது வாழ்க்கையைத் தொலைத்த வர்களும் உள்ளனர்.

உலக சனத்தொகையில் 1.5 பில்லியன் பேரும் இலங்கைச் சனத் தொகையில் 6 மில்லியன் பேரும் யௌவனப் பருவத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். உலக சனத்தொகையில் 1/3 பகுதியினர் யௌவனப் பருவத்திலேயே காணப்படுகின்றனர்.

10 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப் பட்டோர் யாவரும் யௌவனர்களே, இவ் யௌவனப்பருவத்தையும் மூன்றாகப் பிரித்துள் ளனர்.

10–14 வருடங்கள்- முன் யௌவனப் பருவம்
15–18 வருடங்கள்-இடை யௌவனப் பருவம்
19–20 வருடங்கள்-கடை யௌவனப் பருவம்

**யௌவனர்களின் சிறப்பியல்புகள் சில**

- மகிழ்ச்சியுடன் இருத்தலும் குதூகலமாகக் காலம் கழித்தலும்
- சுதந்திரமாக இருத்தல்
- ஆடல் பாடல் போன்ற கலையம்சங்களில் ஆர்வம் காட்டல்
- சுறுசுறுப்புடன் செயற்படலும் ஆர்வ முடமையும்
- சமூக இணக்கப்பாடு
- பொறுமையின்மை
- சவால்களை அறை கூவல்களை எதிர் கொள்வதில் விருப்பு
- முடிவெடுத்தல்
- விரைவில் மனத்தாக்கத்திற்கு உள்ளாதல்
- அதிகாரத்தை எதிர்த்தல்
- கையாண்டு பார்த்தலில் ஆர்வம் காட்டல்
- அன்பு, காதல், எதிர்ப்பாற் கவர்ச்சி போன்ற புத்துணர்வுகள் தோன்றுதல் என்பனவாகும்.

இவை போன்ற சிறப்பியல்பைக் கொண்ட பருவமே யௌவனப் பருவமாகும். இப்பருவத்தில் ஒரு பொதுவான பண்பு குழுவாகச் சேர்தலாகும். ஒத்த கருத்துக்கள், ஒத்த அபிலாசைகள் கொண்டோருடன் பழகுவதில் காட்டும் விருப்பு, அவர்களுடன் குழுவாகச் சேர்தல் ஆகியன இப்பருவத்தி னரிடையே காணப்படும் பொதுவான பண்புகளாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குழுவின் மற்றைய அங்கத்தவர்களின் கருத்துக்களை அவ்வாறே ஏற்றுக்கொள்வதும் அவற்றிற்கு அமையச் செயற்படுவதுமே இப்பருவத்தினரின் பண்பாகும். இது குழுவில் தொடர்ந்து இடம் பெறுவதற்கான ஒரு முயற்சி எனக் கருதப்படுகின்றது.

இன்றைய யௌவனர்கள் கூடுதலாக நல்வழியில் செயற்படாமல் தீய வழியிலே செயற்படுகின்றார்கள். சினிமாப் படங்களைப் பார்த்து விட்டு கதாநாயகர்களைப் போல மாறு வேடம் தரித்துத் திரிகின்றார்கள். இதனை அழகான சம்பாஷணையில் ஒரு வயோதிபர் இவ்வாறு கூறுகின்றார்.

"என்ன தம்பி இப்படி தலையை மொட்டை அடித்திருக்கின்றாய் பழனி அல்லது திருப் பதிக்குப் போய் ஏதும் நேத்திக் கடன் கழித்து விட்டு வந்தனீரோ"

"அதொன்றுமில்லை, ஆளவந்தான் படம் பார்த்தனான் கமலைப் போல மொட்டை அடித்தால் என்ன என்று யோசனை வந்தது அதுதான்."

இதுதான் இன்றைய யௌவனத்தின் பண்பு, தென் இந்தியச் சினிமாவில் ஒரு மனிதனின் வாழ்க்கையை 3 மணித்தியாலத்தில் காட்டு கிறார்கள் இதனைப் பார்த்து யௌவனர்கள் 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்தியாலம் தான் வாழ்க்கை என நினைத்து என்னென்னவோ செய்கின்றார்கள். அதுமட்டுமா படத்தில் உள்ள நடிகர்களைப் போல் புகைப் பிடித்தல், வாகனங்களைப் பெருந்தெருக்களில் விரைவாகச் செலுத்துதல், பஸ்வண்டியிலும் புகைவண்டியிலும் மிதி பலகையில் நின்ற படி பயணம் செய்தல் இது போன்ற செயல்களில் ஆண் பிள்ளைகளே பெரிதும் ஈடுபடுவதுண்டு தான் ஒரு தைரியசாலி என்பதைக் காட்டுவதற்காகவோ, ஒரு பெண் பிள்ளையின் கவனத்தை ஈர்த்துக் கொள்வதற்காகவோ இவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபடுவோரும் உண்டு. இவற்றை யெல்லாம் செய்து விட்டு பின்னர் வேதனைப் படுவதும் அவர்களே!

இது ஒரு புறம் இருக்க பெரும்பாலான செயல்களைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்க்க வேண்டும் எனும் ஆவல் இப் பருவத்திலேயே ஏற்படுவது இயல்பானதாகும். எனினும் அவ்வாறான சில பரீட்சார்த்த செயல்களால் துர் விளைவுகள் ஏற்படுகின்றன. மதுபானம் அருந்துதல், போதைப்பொருட் களைப் பயன்படுத்துதல், ஆபாசத்திரைப்படம் பார்த்தல் இவற்றைப் பரீட்சாத்தமாக ஒரு தடவை பயன்படுத்திப் பார்ப்பதன் மூலம் இவற்றிற்கு அடிமைப்பட்டு அதனையே தொடர்ந்து செய்யத் துடிக்கின்றார்கள். அவை கிடைக்காத பட்சத்தில் கொலையே செய்யத் துணி கின்றார்கள். இதுவே இன்றைய யாழ் யௌவனர்களிலும் பரவியுள்ளது. அண்மைக் காலங்களில் கோஷ்டி மோதல், ஆள்கடத்தல் A/L பரீட்சை எழுதிக்கொண்டிருந்த சமயத்தில் மாணவியை கடத்தும் செயலிற்கு கூட யௌவனர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அம் மாணவியின் எதிர்காலம் யாது? இவற்றை செய்துவிட்டு பிடிபட்டு பத்திரிகைக்கு போஸ் கொடுக்கும் காட்சியை பார்த்திருப்பீர்கள் அப்போது தாங்கள் பெரிய தைரிய சாலிகள் வீரதீரச் செயலைச் செய்தவர்கள் போல் காட்சியளித்திருந்தனர். இவர்களின் வயது 16 –21 வரை இதுதான் இன்றைய யௌவனர் களின் உலகம். இவ்வாறு இன்று உலகிலுள்ள யௌவனத்தினது தீய செயல்கள் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் நீண்டு கொண்டே செல்கின்றது.

இன்று உலகில் யௌவனர்கள் வறுமை, பட்டினி, கதியற்ற நிலை என்பனவற்றை எதிர்நோக்குகின்றனர். இந்நிலை பெண்களும், யுவதிகளையும் விபச்சாரத்தில் ஈடுபட வைக்கின்றது. இதனால் பல யௌவனச் சிறுமிகள் பாலுறவுப் பிழிவு, உடல் ரீதியான உள ரீதியான விருத்தியில் நாசகரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வேண்டப்படாத பத்திரமற்ற பாலுறவு வேண்டப்படாத கர்பங்கள் அல்லது பாலியல் ரீதியான தொற்று வியாதிகள் HIV எயிட்ஸ்வநோய்களுக்கும் இடமளிக்கின்றது. வறுமை, பட்டினி ஆகிய வற்றால் தான் யௌவனப்பருவத்தினர் சீரழிகின்றார்களா? இல்லை நன்கு வசதி படைத்த யௌவனர்களும் நவீன கணனித் தொழில்நுட்ப வலைகளில் சிக்கி வாலிபத்தை தடம் புரள வைக்கின்றார்கள்.

இன்றைய கால கட்டத்தில் இணையத் தளங்கள் மனித வாழ்வில் பின்னிப் பிணைந்து விட்ட நிலையில் அன்றாட சிறு கருமத்திற்காக இணையத் தளங்களை நாடும் நிலையில் அவை மனித முன்னேற்றத்தில் பங்கேற்றாலும் யௌவ னத்தினரை இணையத் தளங்கள் அவர்களின் எதிர் காலத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. இன்று அண்மைக் காலமாக ஆய்வுகளின் படிவஇணையத் தளங்களில் ஆபாச வலை அமைப்புக்களில் உலாவருபவர்களின் எண்ணிக்கையே அதிகம் என தகவல் வெளியாகியிருக்கின்றன. யௌவனப் பருவத்தில் இயல்பாகவே ஆண்களுக்கும், பெண்களுக்கும் செக்ஸ் உணர்வு அதிகரித்திருக்கின்றது. இது இயல்பாகவுள்ள விடயம், முன்பெல்லாம் பெண்கள் பெண்களிடமும் ஆண்கள் ஆண்களிடமும் பேசிக் கொள்வார்கள் செக்ஸ் புத்தகங்களை மறைத்துப் பார்ப்பார்கள். ஆனால் இது நவீன காலம் நிலமை மாறிவிட்டது. விஞ்ஞான ரீதியாக இன்ரநெற் கபேக்கள் மூலம் இவர்கள் தமது செக்ஸ் உணர்வுகளுக்கு வடிகால் தேடிக் கொள்கிறார்கள். இந்த செக்ஸ் காட்சிகள் பார்ப்பது வடிகால் என்ற நிலை மீறி தூண்டுதல் என்ற கட்டத்தை அடைந்துவயௌவனப் பருவத்தினர் திசைமாறிச் செல்கின்றார்கள். இவற்றால் இன்று பரவலாக பேசப்படும் ஆட்கொல்லி நோய் AIDS தாக்கத்திற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகின்றனர் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு மனித இனத்தின் சராசரி வயது 20 அல்லது 30 என்று தான் இருந்தது.

அறிவியலும் மருத்துவமும் வளர்ச்சி யடைந்து 60, 70 என மனிதனின் சராசரி வயதைக் கூட்டி அழகு பார்த்தார்கள் இன்றைய நிலையில் சராசரி வயது மனிதனுக்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதைப் பார்த்தால் 90, 100 ஐயும் தாண்டியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை வயது அசுர வேகத்தில் பின்நோக்கி செல்ல ஆரம்பித்துள்ளது. உலகின் பணக்கார நாடுகளில் ஒன்று போர்ட்ஸ் வானா என்ற நாட்டில் ஒரு மனிதன் சராசரி வயது இன்றைக்கு முப்பது ஆக குறைந்து விட்டது கடந்த ஆண்டில் மட்டும் 50 இலட்சம் பேர் புதிதாக எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் யௌவனப் பருவத்தினரே அதிகம்.

**"உதிர்ந்த மலரிதழ்கள் மீண்டும் புதுமலராக மாற மாட்டா"**

யௌவனப்பருவத்திலே தோன்றிய AIDS அவர்களிற்கு மட்டுமல்லாது அந்நோய் தனது மனைவி, ஏதுமறியாத பச்சைக் குழந்தை யாவருக்கும் கொடுத்துத்தான் இவ் உலகை விட்டுச் செல்கிறார்கள்.

யௌவனப் பருவத்திலே தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்துதல், களவு, கொள்ளை, கற்பழிப்பு, வன்முறைகளைக் கையாளல், ஆபத்தான நடத்தைகளைக் கையாளல், விரக்தி, சீர்குலைக்க முனைதல், குழப்பம் விளைவித்தல், உடனடித் தீர்வுகளை எதிர்பார்த்தல் போன்ற வழிகளில் தடம் புரளுகின்றனர். இவற்றிற்கு முக்கியமான காரணங்களாக கல்வி வேலையில்லாப் பிரச்சினை யுத்தம் போன்றன விளங்கு கின்றன.

யௌவனத்தினை ஆக்கபூர்வ தன்மை யான பாடல்கள், கவிதைகள், நாடகங்கள் போன்றவற்றில் ஈடுபடச் செய்தல், பல்வேறு சமூக நலன்புரி வேலைகளில் ஈடுபடச் செய்தல், புத்தாக்கத்தை உருவாக்குதல், கையாளுதல், சமூக சீர்திருத்தம், ஜனநாயக சமூகம், சமூக சேவை, சூழலைப் பேணல், சிரமதானம், புதியன தேடல், அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிட வைத்தல், அர்ப்பணிப்புடன் செயற்பட வைத்தல், சுய தொழிலில் ஈடுபட வைத்தல், புத்துணர்வு உலக சமாதானம் போன்ற செயல்களில் ஈடுபடவைத்து உலகின் நல்லதொரு நாளைய சமுதாய தலைவர்களை யௌவனத்தினரை நல்வழியில் யாவரும் வழிகாட்டுவோமாக!

**உசாவிய நூல்கள்**


1. மலர்ந்த யௌவனம் (யௌவனர் சுகாதார வழிநடத்து குழுவின் வெளியீடு - ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் - 1996)
2. சிறுவர் மீது ஆயுத மோதலின் தாக்கம் (கிறேஷா மவேயின் அறிக்கை - ஐக்கிய செயலாளர் நாயகத்தின் நிபுணர்)
3. தினக்குரல் பத்திரிகை (புதன் வசந்தம் 11-Sep-2002)


**ஆக்கம்: திரு.ப.சிவசுதன்**

**தொகுப்பு: திரு.க.ஈஸ்வரன்**
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் பார்வையில் "சுனாமி"(Tsunami)

2004 டிசெம்பர் 26ஆம் திகதி சுமாத்திரா தீவுக்கு அருகே ஏற்பட்ட பூகம்பமும் அதனைத் தொடர்ந்து பெருக்கெடுத்த பேரலைகளும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்டிருக்கின்றன. ஐந்து இலட்சத்திற்கும் மேட்பட்டவர்களை நிர்க்கதியாக்கியுள்ளன. குடியிருப்புக்களை தரைமட்டமாக்கியிருக்கின்றன. ஆசியாவின் அழகிய கரையோரங்களை சிதைத்திருக்கின்றன. இந்த இயற்கையனர்த்தத்தால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் பதினான்காயிரம் கோடி டொலர்களை தாண்டுவதாக மதிப்பிடப் பட்டுள்ளது. ரிச்டர் அளவு கோலில் ஒன்பது புள்ளிகளைப் பதிவுசெய்த பூகம்பம், புவியின் சுழற்சி வேகத்தை கூட்டியிருக்கின்றது. சில தீவுகளை இடம்பெயரச் செய்திருக்கின்றது. அதனைத் தொடர்ந்து மணிக்கு அறுநூறு மைல் வேகத்தில் பயணித்த அலைகள், சில தீவுகளின் பூகோள அமைப்பை மாற்றியிருக்கின்றது. இலங்கையில் 35,000 பேர்கள் வரை பலியாகிவிட்டனர்.

கடந்த வருடம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை கடல் கொந்தளிப்பு, இராட்சத அலை என்று பல்வேறுபட்ட பெயர்களில் அழைத்தாலும் அதனை விஞ்ஞானிகள் 'சுனாமி' Tsunami என்று அழைப்பார்கள்.

'சுனாமி' என்பது ஒரு ஜப்பானிய சொல் இரண்டு எழுத்துக்களால் உருவான சொல். 'சு' என்றால் துறைமுகம், 'நாமி' என்றால் அலைகள் துறைமுகத்தில் ஏற்படும் அலைகள் என்பதே கருத்து ஜப்பானின் கரையோரப் பகுதிகள் யாவும் சிறுசிறு துறைமுகங்களே. ஜப்பானில் அதிகம் எரிமலைகள் உள்ளன. இந்த எரிமலைகள் குமுறும்போது ஏற்படும் அதிர்வுகளால் ஜப்பானை அண்டிய பகுதிகளில் பேரலைகள் ஏற்பட்டு இந்த சிறு துறைமுகங்களிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் இப்படி எழும் பேரலைகளுக்கு துறைமுக அலை - சுனாமி என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது. பின்னர் ஜப்பானில் மட்டுமல்ல எங்கும் ஏற்படும் பேரலைகளுக்கு அழிவைத்தரும் இராட்சத அலைகளுக்கு 'சுனாமி' என்ற பெயர் வழங்கப்படலாயிற்று

'சுனாமி' அலைகள் எப்படி ஏற்படுகின்றன. பூமி ஒரு காலத்தில் ஒரு அக்கினிக் கோளமாக இருந்தது என்பதை நாம் அறிவோம். கொஞ்சம் கொஞ்சமாக பூமி குளிரத் தொடங்கி - பின்னர் அதன் மேற்பரப்பு மனிதர் வாழக்கூடிய நிலமாகவும். அழ்ந்த கடல்களுள்ள பள்ளத்தாக்குகளாகவும் மாறியது. என்றாலும் பூமியின் உட்பகுதி இன்னும் அக்கினிக் கோளமாகவே உள்ளது.

பூமியின் மேற்பரப்பு காலஞ் செல்லச் செல்ல உடைந்து கண்டங்களாக மாறியது. இப்படி உடையும் போது உடைந்து விலகிச் செல்லும் போதும் பூமியின் அடியிலுள்ள பாறைகளிலும் விரிசல்கள் தோன்றின. இந்த விரிசல்கள் மூலமாகவே உட்பகுதியிலுள்ள அக்கினிக்குழம்பு வெளிவந்து எரிமலைகளாக பரிணமிக்கின்றன. அதுபோல் பூமியினடியில் தரையானது தட்டுத்தட்டுக் களாக உள்ளது. ஒரு கண்டத்தின் தட்டு கண்டத்தை விட்டு வெளியே சமுத்திரத்தின் அடிவரை நீண்டிருக்கும். இப்படியாகவுள்ள தட்டுக்கள் ஒன்றோடொன்று உரசி மேலேயோ, கீழேயோ செருகப்படும்போது ஏற்படும் அசைவு பூமி அதிர்வாக வெளிவருகின்றது. இப்படியாகத் தான் ஆசியாக்கண்டத்தின் தட்டும் செருகப் பட்டதனால் சமீபத்தில் பெரியளவிலான பூகம்பம் சுமாத்திராவில் ஏற்பட்டது.

### சமுத்திர அடியிலிருந்து 10 கி.மீ ஆழத்தில்

ஆனால் இந்த செருகலோ சமுத்திர அடிமட்டத்திலிருந்து 10கிலோமீற்றர் ஆழத்தில் நடைபெற்றது. இந்த செருகல் நடைபெற்று இடத்தை EPICENTER என்று அழைப்பர்.

இந்த செருகல் ஏற்படும் போது ஒரு தட்டு கீழேயும் மறுதட்டு மேலேயும் அசைவுறுகின்றது. அப்பொழுது கீழே செருகப்படுகின்ற தட்டிற்கு மேலேயுள்ள அவ்வளவு எடையான கடல் நீரும் சமநிலையிலிருந்து கீழே இங்குகின்றது. இதனால் சமநிலையை மீளப்பெற்று நீர் மட்டத்தைப் பேண நீர் அசைவுகள் நடைபெறுகின்றன.

இந்த நீர் அசைவுகள் அலைகளாக பரிணமிக்கின்றன. இந்த அலைகள் பலமடங்கு சக்தி வாய்ந்தவை. குளத்தில் கல் எறிந்தால் எப்படி அலை அலையாக புறப்பட்டு கரையைச் சேருகின்றனவோ அதுபோல் இந்த அலைகளும் ஆரம்பித்த இடத்திலிருந்து வட்டவட்டமாக செல்ல ஆரம்பிக்கின்றன. இவை சுற்றுவட்டாரத்திலுள்ள தரைகளை நோக்கி செல்கின்றன.

### மணிக்கு 600 மைல் வேகம்

இந்த அலைகள் தான் 'சுனாமி' என்ற இராட்சத கடலலைகளின் ஆரம்பம். இவை ஒன்றன் பின் ஒன்றாக மணிக்கு 450



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– 600 மைல்கள் வேகத்தில் சமுத்திரத்தில் பயணிக்கின்றன. கடலில் இருப்பவர்களுக்கு, கப்பல்களுக்கு இந்த அலைகளின் தாக்கம் தெரிவதில்லை. ஏனென்றால் இவற்றின் அலைநீளம் நீளமானது. அதாவது ஒரு அலைக்கும் அடுத்துவரும் அலைக்குமுள்ள தூரம் மிகவும் நீண்டது. அதுபோல் அலை அசைவு உயரமும் AMPLITUDE ஒரு சில அடிகளே.

எனவே விமானத்திலிருந்து பார்த்தாலும் 'சுனாமி' அலைகள் பயணிப்பதை கண்டறிய முடியாது. இதனால்தான் 'சுனாமி' இராட்சத அலைகள் வருவதைக்கண்டறிந்து சொல்வது கடினமாகின்றது. ஏதோ ஒரு அனுமானத்தில் பூமியதிர்வு ஏற்பட்டால் 'சுனாமி' அலைகள் ஏற்படலாம் என்று ஊகித்து பூமி அதிர்வுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் 'சுனாமி' அபாயம் பற்றி அறிவிக்கப்படுகின்றதே தவிர நிச்சயம் 'சுனாமி' அலைகள் ஏற்படும் என்று உறுதியிட்டுக் கூறமுடியாது.

## 100 அடிவரை உயர்ந்து வரும் அலை

சுனாமி அலைகள் கரையை நெருங்க நெருங்க அவற்றின் அலைநீளம் குறைந்து வேகம் குறைகின்றது. ஆனால் அவற்றின் உயரம் சிலவேளைகளில் 100 அடிவரை உயர்கின்றது. ஆனால் 10 அடி தொட்டு 20 அடி உயரமுள்ள சுனாமி அலைகள் கூட பாரிய பலத்த சேதங்களை தரவல்லன.

சுனாமி அலைகள் ஏற்பட பூமி அதிர்வுகள் மட்டும் காரணமல்ல. நிலச் சரிவுகள், எரிமலைக்குமுறல்கள், பூமியில் பாரிய பலத்த விண்கற்கள் விழுவதால் ஏற்படும் அதிர்வுகள் கூட சுனாமி அலைகளை உருவாக்கும்.

கரையை நெருங்க நெருங்க ஒவ்வொரு அலைக்கும் இடைப்பட்ட நேரம் 5 நிமிடத்திலிருந்து 90 நிமிடம் வரை வித்தியாசப் படலாம். முதலாவது வரும் சுனாமி அலை அவ்வளவு சக்தி வாய்ந்ததல்ல. பெரியதுமல்ல. மூன்றாவது நான்காவது சுனாமி அலையே பிரமாண்டமானது. உயரத்திற்கு இவை எழும்புவதால் கடல் மட்டத்திலிருந்து 25 அடி உயரத்திற்குட்பட்ட இடங்கள் இந்த சுனாமி அலைகளால் பாதிக்கப்படுகின்றன.

இந்த அலைகளின் சக்தி அளப்பெரியது. பல தொன் நிறையுள்ள பாறைகளையே 100 யார் தொலைவுக்கு உருட்டிச் செல்லும் சக்தி வாய்ந்தவை. கடலுக்குள் சங்கமிக்கும் ஆறுகள் சிற்றாறுகளின் ஓட்டத்திற்கெதிராக எதிர்நீச்சல் போட்டு உள்புகக் கூடியவை சுனாமி அலைகள். இவ்வாறு கொழும்புக் கரைகளில் நடைபெற்றுள்ளன. பூமியதிர்வு 6.5 ரிச்டர் அளவீட்டுக்கு அதிகமாக இருக்கும் போது சுனாமி அலைகள் உருவாகின்றன என்பது ஆய்வாளரின் கணக்கீடாகும்.

## எவரும் ஓடித்தப்ப முடியாது

சுனாமி அலைகளிலிருந்து மனிதன் ஓடித்தப்ப முடியாது. மனிதனின் ஓட்ட வேகத்தை விஞ்சியது சுனாமி அலைகளின் வேகம். அலைகளினதிர்வு வேகத்தின் வித்தியாசத்தால் சுனாமி அலைகள் கரையை தொடமுன்னர் கடல் நீர் உள்வாங்கப்பட்டு கடல்தரை சில மீட்டர் தூரம் வெறும் தரையாக காட்சியளிப்பதுண்டு. இதனையடுத்து உள் வாங்கப்பட்ட கடல்நீர் அவ்வளவும் உருண்டு திரண்டு உயர்ந்து எழுந்து 10 - 20 அடி உயரத்தில் பாரிய வேகத்துடன் கரையை நோக்கி பாய்ந்துவரும்.

சுமாத்ரா தீவில் ஏற்பட்ட அதிர்வில் உருவாகிய சுனாமி இலங்கை வந்து கிழக்கு கரையைத் தட்ட 2 மணிநேரம் பிடித்தது. மேற்குக் கரைக்கு தெற்கால் சுற்றிவர மேலும் 2 மணிநேரம் பிடித்தது. இந்து சமுத்திரத்தைக் கடந்து சென்று இதே சுனாமி அலை ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியான சோமாலியா, கென்யா பகுதிகளில் தன் கைவரிசையைக் காட்ட 24 மணி நேரம் எடுத்தது.

இலங்கை ஒரு அரண்போல் இருந்ததால் மாலைதீவு அலையின் தாக்கத்திலிருந்து தப்பியது. இல்லாவிடில் இன்று இலங்கை என்றொரு நாடே இருந்திருக்காது என்ற விமர்சனங்கள் உள்ளன.

**G.ரவி** (ஆசிரியர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE PROBLEMS YOUTH FACE

In the $21^{st}$ century the world faced many problems such as pollution, the aftermath of nuclear test explosious and so on. Many of these problems have been caused by the development of Technology and Science. Apart from these, there are problems faced by the various age groups of people such as children, youth and even adults.

There are many problems faced by the youth of today. We know that the youth of today are the leaders of tomorrow, and a good God fearing, well disciplined lot of youngsters can make a better society. The youth come under an age group where they are neither children nor adults. Many a youth like to be treated adults even when they behave like children.

Uncentainty of the future is one of the main problems faced by the youth . The root cause of this problem I feel is the present educational system. A purely scholastic curriculum is what the leaders and parents want for their children. And they are unware of the resistance shown by children of all ages, as to what they ought to be taught, as opposed to what they themselves spontaneously and naturally want to learn. Schools prepare their children for an academic career. As such, students who cannot reach the required standard are considered drop outs. This leads to frustration and unemployment. Their aims and ambitions of a bright future shattered, they sometimes take the path of violence **to satisfy their disappointments.** If the problem of education is not solved. it can always lead to disharmony and shattering of peace in the country.

Another problem faced by the youth is drug abuse. This is a major problem in the western countries and now it has spread to the developing countries as well. The use of drugs is found mainly among youth as they are more susceptible to new ideas and ventures. By taking drugs the youth think. that they can forget all their cares and worries and be happy. But they end not only in making their bodies weak and at the same becoming drug addicts. Once they get addicted, the victims will even go to the extent of cammitting crimes to purchase the drugs.

Unhappy and broken families too, are another cause for the revolt of the youth. In some families where both parents go for work, there's hardly anytime to sit back and listen to their children's problems. They do not understand that their children have feelings and need their love and care. Some parents think that if they provide their children with clothing, food and education, it is more than enough. In such families the youth feel lonely. as there is no one at home to talk to and listen to their problems. This lack of communication between parent and children leads to furstration on the part of the youth. This sometimes leads the youth in the worng path and make their lives miserable.

The root cause of these problems seem to be low self-esteem. Hence, prevention lies in buildingup their self esteem by giving them unconditional love, fulfilling their needs and accepting them as they are. Importance should be laid on parent child bond and giving them a useful and practical education.

It is the duty of every citizen and every parent to make the youth of today a well disciplined good citizen of the country.

*P. Nishanthini*
**J/Vembadi Girls high School**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

## நாளைய உலகு

இடர்படும் வாழ்க்கையூடே
இனியதோர் உணர்வை ஊட்டி
சுடர்மிகும் அறிவுக்கு
சுந்தரமாய்ப் பணி செய்யும்
கலைமகளே உனக்கு - என்னுள்ளங்
கனிந்த வந்தனங்கள்.

நாளைய உலகை எட்டிப்பார்க்கும்
நரசிம்மர்கள் நாமல்ல
சிறப்புடனே உலகைச் சீராக்க
சிந்தனை வளம் கொண்டவர்கள்
இன்னும் இனியும் வேண்டுமா
இந்தக் கொடிய யுத்தம்?.....

நாடி ஓடியே கல்வியும் கற்கிறோம்
நாங்கள் மோசங்கள் தூசென ஏற்கிறோம்
பாடி ஆடியே பசுமைகள் சேர்க்கிறோம்
பாவமாய் நாமும் பரிதவிக்கிறோம்

இடிந்திடக் கடிந்திட எழுந்திடும் கொட்டில்கள்
இன்னமும் எங்களின் துணிவினைக் காட்டிடும்
விடிந்திட விடிந்திட அறிவினைத் தீட்டியே
வேர்கள் நிலைத்திட வேண்டியே நிற்கிறோம்.

இன்றைய சமுதாயம் - அது
இளைய சமுதாயம்
நாளைய உலகை ஆளப்போகும்
நாத்திறம் கொண்டவர்கள் நாம்
வாலிப நெஞ்சங்களே
வாய்மை இழந்துவிட்டீர்களா...?

கணனி உலகைக் கணித்திடவே - இன்னோர்
கணிப்பொறி ஒன்று வேண்டும்.
நாளைய உலகைக் கணித்திட
நாமொரு கணிப்பொறி ஆக்கிடுவோம்.
"கண்மூடிப் பால்குடிக்கும் பூனையைப் போல்
கள்ளத்தனம் கொண்டவர்கள் நாமல்ல"

புத்தி தெரிந்ததும் உலகம் தெரிந்தது
போன திக்கெலாம் புரட்சிகள் வெடித்தது
நித்தமும் துயர் எங்கும் விரிந்தன
நீண்டதோர் உணர்வுகள் கூண்டை
உடைத்தன

மூங்கில்போல் இடைநித்தம் வலித்திட
இரண்டு சக்கரம் சுற்றியே செல்கிறோம்
எம்மைப் படைத்ததை உணர்கின்றோம்
என்றும் நாளையுலகை வளமாக்குவோம்

நல்ல நல்ல ஜீவராசிகள்
நாளைய உலகிற்கு வேண்டும்
கள்ளத்தனம் மிக்க
கயவர்களை ஒழிக்க
கற்றுத் தேறியே வாரீர் - எம்
கரம் பற்றும் இளைஞர்களே!

இன்றைய உலகில்
இளம் பெண்கள் படும் பாடு
நாளைய உலகிலும் - அது
நடக்க வேண்டுமா?....
நன்றியுள்ள மானிடமே
நச்சரித்துக் கூறிவிடு!........

'பெண்பாவம் பெரும்பாவம்' என்பார்களே
அச்சீதாவின்
பெரும் பாவம்தான் ஆட்டுகிறதோ நம் நாட்டை
சின்னஞ் சிறு பிள்ளைகள்
சிறு உரிமைகள் இன்றித் தவிக்கிறார்கள்.

இன்றைய உலகின் இடர்களைக் கைவிட்டு
இன்பமுடன் வாழ்வோம் இளைய
சமுதாயமே!......
நாளைய உலகை ஆளப் போகும்
நாயக நாயகிகளே!......

*By: J. Mourliya*
*J/ Vembadi Girl's high school.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தைமிகு விண்வெளித் தகவல்கள்

## விண்கற்களின் பருமன்

விண்கற்களிலிருந்து வீசுகின்ற ஒளியினைக் கொண்டு அவற்றின் பருமனைக் கண்டறிய முடியுமென விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அவ்வாறே பூமியிலிருந்து குறித்த விண்கல் காணப்படும் தொலைவினைக் கொண்டும் நட்சத்திரத்தின் அருகாக அது நகரும் போதும் அவற்றின் பருமன் கண்டறியப்படுகின்றது. இத்தகைய கணிப்புக்களின்படி 'சிரஸ்' என்ற விண்கல்லே பாரிய விண்கல்லாக கண்டறியப்பட்டுள்ளது. இது 933km க்கும் அதிகமான பருமனைக் கொண்ட விண்கல்லாக கருதப்படுகின்றது. எனினும் அநேகமான விண்கற்கள் 100km க்கும் குறைந்த பருமனைக் கொண்டவையாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## செவ்வாயில் தண்ணீர் உள்ளதா?

செவ்வாய்க் கோளில் தண்ணீர் இருக்கக்கூடும் என்ற கருத்து தற்போது மென்மேலும் உறுதியாகி வருகின்றது. அண்மையில் செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட 'ஒப்போயுனிட்டி' என்ற விண்கலத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே இது உறுதியாகியுள்ளது. இதன்படி செவ்வாயில் உப்புக்குச் சமனான வகையில் 'சல்.'.பேட்' இருப்பதாகத் தெரியவந்துள்ளது. மேலும் அங்கு ஆழமற்ற பகுதிகளிலேயே தண்ணீர் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனினும் இவற்றை முழுமையாக உறுதிப் படுத்தும் வகையில் அதற்குண்டான சாட்சியங்கள் கிடையாதெனக் கூறப்படுகின்றது.

## புதன் நோக்கிய விண்கலப் பயணம்

புதன் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவென இது வரையில் 'மெரினா' என்ற ஒரேயொரு விண்கலமே அனுப்பப்பட்டுள்ளது. ஒரு கோளின் ஈர்ப்புசக்தியைப் பயன்படுத்தி மற்றுமொரு கோளுக்குச் சென்றடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும். வெள்ளிக் கோளின் ஈர்ப்புசக்தியைப் பயன்படுத்தியே இந்த விண்கலம் 'புதன்' கோளை 3 தடவைகள் வலம் வந்துள்ளது. இவ்வாறு வலம் வருகையில் புதன் கோளை மிக அருகாமையில் முதலாவது தடவையாக இதுவே படம்பிடித்தது. இதன் மூலம் புதன் கோளின் சுற்றுப்புறச்சூழல், வெளிப்புறச் சூழல் ஆகியவற்றைப் பற்றி அறிவதற்கு முடிந்துள்ளது.

## விண்வெளியில் ஆய்வு நிலையம்

முதல் தடவையாக உலக நாடுகள் பல ஒன்றிணைந்து 1997ம் ஆண்டில் விண்வெளியில் ஆய்வு நிலையமொன்றை நிறுவின. இது 2002ம் ஆண்டு வரை செயற்பட்டு வந்தது. அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து மேற்கொண்ட இந்த ஆய்வு நிலையமானது 88m நீளத்தையும் 110m அகலத்தையும் கொண்டது. பூமியிலிருந்து 407km தொலைவில் விண்வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த ஆய்வு நிலையத்தில் 6 பேர் தங்கியிருக்க முடியும். இதற்கு முன்னதாக ரஷ்யாவும் விண்வெளியில் 'மிர்' என்ற ஆய்வு நிலையமொன்றை தனித்து ஏற்படுத்தியிருந்தது. 1986ம் ஆண்டில் தான் இது முதன்முதலாக விண்வெளிக்குச் செலுத்தப்பட்டது. மூன்று மாதங்களின் பின்னர் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இங்கு தங்கினர். தற்போதும் இந்த 'மிர்' விண்வெளி ஆய்வுநிலையம் இயங்கி வருகின்றது.

## ரொக்கெட்டின் ஆரம்பம்

எரிபொருள் சக்தியைக் கொண்டே 'ரொக்கட்'கள் விண்ணோக்கி உந்தப்பட்டு அவை பயணிக்கின்றன. நீண்ட தூரத்திற்கு இவை பயணிக்க வேண்டியிருப்பதால் 'ரொக்கெட்'களில் எண்ணெய் நிரப்பப்படுவதற்கென பெரும்பகுதி ஒதுக்கப்படுகின்றது. எண்ணெய்க் களஞ்சியத்தின் தோற்றமே இவ்வாறு 'ரொக்கெட்'களின் தோற்றத்தைப் பெரிதாகக் காட்டுகின்றன. இதனால் இந்த 'ரொக்கெட்களில்' விண்வெளி வீரர்கள் இருப்பதற்கு சிறிதளவு இடமே ஒதுக்கப் பட்டிருக்கும். 1903ம் ஆண்டில் ரஷ்யாவைச் சேர்ந்த கொன்ஸ்டன்டி என்பவரே முதன் முதலாக 'ரொக்கெட்' தொடர்பான ஆய்வு ரீதியிலான தகவலை வெளியிட்டவராவார். எனினும், இது அமெரிக்காவைச் சேர்ந்த பொறியியலாளரான ரொபர்ட் கொடார்ட் என்பவரினாலேயே 1926ம் ஆண்டில் செயல் வடிவம் பெற்றது. இதுவே, ரொக்கெட்டின் ஆரம்பம் எனக் கருதப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாயில் எரிமலைகள்

விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இது வரை காலமும் நினைத்திருந்ததற்கும் மாறாகச் செவ்வாய்க்கோள் பற்றிய புதுப்புது விடயங்கள் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. குறிப்பாக ஐரோப்பாவின் சார்பாக அனுப்பப்பட்ட விண்கலமொன்று வழங்கியுள்ள தகவலின் படி செவ்வாய்க் கோளில் பாரிய எரிமலைகள் இருப்பதாகவும் அவை இப்போதும் இயங்கிக் கொண்டே இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. 'மார்ஸ் எக்ஸ்பிரஸ் ஓர்பீட்டர்' என்ற விண்கலத்திலிருந்து பெறப்பட்ட புகைப்படங்களின் அடிப்படையில் கடந்து வந்த இரண்டு மில்லியன் வருடகாலத்தில் செவ்வாயில் எரிமலைகள் உந்திக்கொண்டே இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எரிமலைகள் புவியிலுள்ள எரிமலைகளுக்குச் சமமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. செவ்வாயின் மிக உயர்ந்த மலையாகக் கருதப்படும் 'ஒலிம்பஸ்' எரிமலையும் தீக்குழம்புகளைக் கக்கிக் கொண்டிருக்கக் கூடும் எனவும் கருதப்படுகின்றது. தற்போது செவ்வாய்க்கோளினை வலம்வந்து கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கும் விண்ஓடத்தின் பணிகள் முடிவடைவதற்கிடையில் செவ்வாயில் எரிமலை வெடிப்புச் சம்பவங்கள் எதுவும் நிகழ்ந்தால் அதனையும் இந்தப் புகைப்படங்களில் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## சனிக்கோளில் பனிப்பாறை கண்டுபிடிப்பு !

**- விம்ஸ் என்ற கமராவினால் தெரியவந்துள்ளது.**

சனிக்கோளின் துணைக்கோளாகக் கருதப்படும் 'டைட்டன்' தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற 'கெஸினி' விண்கலமானது சனிக்கோளில் பனிப்பாறையொன்று இருப்பதைக் கண்டறிந்துள்ளது 'கெஸினி' விண்கலத்தினால் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் வெண்ணிற வட்டவடிவில் காணப்படுகின்ற பிரகாசமான புள்ளியைக் கொண்டே இது உறுதிசெய்யப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த வட்டமானது 30 மீற்றர் சுற்றளவைக் கொண்டதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் சனிக்கோளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகளின் படி அங்கு 'மிதென்' அடங்கிய சமுத்திரம் காணப்படுவதாகக் கருதப்பட்டிருந்தது. எனினும், தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டுள்ள ஆய்வுகளின் படி அங்கு அவ்வாறான சமுத்திரம் எதுவும் கிடையாது எனக் கூறப்பட்டிருந்தது. அத்தோடு 'கெஸினி' விண்கலத்தில் பொருத்தப்பட்டிருக்கும் 'விம்ஸ்' என்ற விசேட கமராவினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் படி, சனியில் ஐஸ் மலைகள் காணப்படுகின்றன. அவை உருகி நீர் நிலைகளாவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு என்பது தெரியவந்துள்ளது.

**விண்நோக்கிச் சென்ற செய்மதிகள் சில**

- **ஸ்புட்னிக்** - இது ரஷ்யாவினால் முதன் முதலாக 1957ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது. விண்வெளியில் காணப்படும் அமுக்க வேறுபாடுகளை இதனால் கணிக்க முடிந்தது. இதன் பின்னர் மேலதிகத் தகவல் சேகரிப்பிற்காக 'லைக்கா' என்ற நாயுடன் 'ஸ்புட்னிக் - 2' விண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

- **வைக்கிங்** - அமெரிக்காவும், ரஷ்யாவும் தேவையான சந்தர்ப்பங்களில் செவ்வாயில் தரையிறங்கக் கூடிய செய்மதிகளைத் தயாரித்திருந்தன. வைக்கிங்-1, வைக்கிங்-2 ஆகிய இரண்டு செய்மதிகளும் 1976ம் ஆண்டு செப்டெம்பரில் வெற்றிகரமாகச் செவ்வாயில் தரை யிறங்கின. இவற்றினால் 3000 இற்கும் மேற்பட்ட புகைப்படங்களைப் பெறமுடிந்தது.

- **டொபெக்ஸ்** - பூமியிலிருந்து 1320km தூரத்தில் மேற்புறமாகச் செலுத்தப்பட்டிருக்கும் இச்செய்மதியானது கடலில் நீரோட்ட வேகம், காற்றின் வேகம், நீர் அலை ஆகியன குறித்து ஆய்வுகள் மேற்கொண்டுள்ளது. இதன்படி கடல்நீரின் மட்டமானது ஒரே சமஅளவில் காணப்படவில்லை என்பதையும் இது உணர்த்தியுள்ளது.

- **கெஸினி** - ஹியூஜன் - கெஸினி மற்றும் ஹியூஜனின் நடவடிக்கைகள் 1997ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. 2004ம் ஆண்டில் இது சனிக்கோளை அண்மித்தது. கெஸினி, ஹியூஜன் என்ற இரண்டு இணைப்பைக் கொண்ட இந்தச் செய்மதியில் 'கெஸினி' அமெரிக்காவின் தயாரிப்பு அளவில் சிறிதான ஹியூஜன் பகுதியானது சனியின் உபகோளான டைட்டனில் தரையிறக்கப்பட்டதால் ஏராளமான தகவல்களைத் திரட்ட முடிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'நாஸா' நிறுவனம் விண்வெளிப் பயணத்திற்குப் பயன்படுத்திய விண்கலங்கள்**

- **கொலம்பியா** - 1981ம் ஆண்டு ஏப்ரல் 12ம் திகதியன்று விண்வெளி ஆராய்ச்சியில் பயணத்தை மேற்கொண்ட 'கொலம்பியா' 2003ம் ஆண்டு விண் வெளியில் விபத்துக்குள்ளாகும் வரையில் 22 வருடங்களாக விண்வெளிப் பயணத் திற்கும் பயன்படுத்தப்பட்டது. இதுவே எடைகூடிய விண்கலமாகும். விண் வெளியில் புகைப்படங்களைப் பிடிக்கக் கூடிய செயற்கைக் கோள்களைக் கொண்டு சென்றமை உட்பட பெருமளவு பங்களிப்பினை விண்வெளி ஆராய்ச்சியில் இது வழங்கியிருந்தது. இது ஆராய்ச்சி களை முடித்துக் கொண்டு 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதி 7 விண்வெளி வீரர்களுடன் புவிநோக்கித் திரும்பிக் கொண்டிருக்கையில் விபத்துக்குள்ளானது. இதன் சிறு உதிரிப் பாகங்கள் கழன்று போனதன் காரணமாக ஏற்பட்ட தீயினா லேயே இது விபத்துக்குள்ளானது.

- **செலன்ஜர்** - இது 'நாஸா' ஆய்வு மையம் உருவாக்கிய 2வது விண் கலமாகும். 1982ம் ஆண்டு யூலை மாதம் விண்வெளி ஆராய்ச்சிக்கென 7 விண்வெளி வீரர்களுடன் சென்று கொண்டிருந்த போது இது விபத்துக்குள்ளாகியது. அமெரிக் காவின் விஞ்ஞானத்துறையில் திருப்பு முனையை ஏற்படுத்திய விண்கலமாகக் கருதப்பட்டாலும் இதனால் எதிர்பார்த்தது போல் உச்சப் பயனைப் பெற முடிய வில்லை.

- **என்டியேவோர்** - 'செலன்ஜர்' விபத்துக்களானதன் பின் தயாரிக்கப்பட்ட இது 1992ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி தனது முதற் பயணத்தை ஆரம்பித்தது. இப்பயணம் வெற்றிகரமான தாக அமையாவிடினும் இதன் மூலம் பல விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற் கொண்டதும் மறுக்க முடியாது. இப் பயணத்தின் போது தொடர்ச்சியாக 8 மணித்தியாலங்கள் விண்வெளியில் இருந்ததன் மூலம் விண்வெளி வீரர்கள் உலக சாதனையும் நிகழ்த்தினர்.

- **எட்லண்டிஸ்** - 151, 315 இறாத்தல் எடை கொண்ட இது 1985ம் ஆண்டு ஒக்டோபர் 3ம் திகதி தனது விண்வெளிப் பயணத்தை முதன்முதலாக மேற் கொண்டது. 24 தடவைகள் விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு பல விண்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொண்ட இது 'மிர்' ஆய்வு நிலையத்துடன் அதிக தொடர்பு களைக் கொண்டிருந்தமை சிறப்பம்ச மாகும்.

- **டிஸ்கவரி** - 1983ம் ஆண்டில் தயாரித்து முடிக்கப்பட்ட இது 1984ம் ஆண்டு ஓகஸ்ட் 30ம் திகதி தனது முதலாவது விண்வெளிப் புயணத்தை மேற்கொண்டது. 2003ம் ஆண்டு 'கொலம்பியா' விபத்துக்குள்ளானதையடுத்து 2005ம் ஆண்டு யூலை மாதம் 26ம் திகதியன்று இது 31 ஆவது தடவையாக விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது ஏவப்பட்ட போது, அதன் எரிகலனில் இருந்தும், மூக்குப் பகுதியில் இருந்தும் இரண்டு பாகங்கள் கழன்று விழுந்தன. ஓடத்தின் வெப்ப பாதுகாப்பு ஓடுகளை அவை சேதப் படுத்தின. எனினும், இச்சேதத்தை விண் வெளிவீரர்கள் விண்வெளியில் மிதந்தவாறு வெற்றிகரமாகச் சரிப் படுத்தினர். சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்ற 2 விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் மற்றும் ஆய்கருவிகளை இது எடுத்துச் சென்றது. இது 2005ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 09ம் திகதி வெற்றிகரமாகப் பூமியில் தரையிறங்கியது.

## புளூட்டோவுக்கு அப்பால் சுற்றும் 10வது கிரகம்?

சூரியக் குடும்பத்தின் கடைசிக் கிரகமான புளூட்டோவுக்கு அப்பால் இன்னொரு கிரகம் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. முதன் முதலாக 2003ம் ஆண்டு ஒக்ரோபர் 31ம் திகதி தொலைநோக்கி மூலம் அமெரிக்க வானியல் நிபுணர் மைக் பிரவுண் இதனைக் கண்டுபிடித்தார். இது பூமியிலிருந்து சுமார் 1500 கோடி Km தொலைவிலிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. புளூட்டோ கிரகத்தின் விட்டத்தின் (2302Km) அளவுடையதாகவோ அல்லது அதைவிட 1½ மடங்கு அளவுடையதாகவோ இது இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது உண்மையென உறுதிப்படுத்தப்படும் வரை இதை '2003 – யுபி 313' என்று அழைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

**இ.சுவீந்தன்**
**யாழ் இந்துக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1) U.N.O வின் விரிவு யாது?
**ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்**

2) பாடல் இல்லாமல் தமிழில் முதல் முதல் வந்த திரைப்படம் யாது?
**சந்திரலேகா**

3) உலகின் கூரை என அழைக்கப்படும் நாடு எது?
**திபெக்**

4) பூகம்பம் நில நடுக்கம் கடற்கோள் என்பவற்றை அளவிடும் அளவுக்கோள் எது?
**றிச்டர்**

5) 'சுனாமி' கடற்கோள் பேரலையை ஏற்படுத்திய மையப்பகுதி எது
**சுமாத்திராக் கடற்கரை**

6) கம்பூனிசத்தின் தந்தை என அழைக்கப் படுபவர் யார்?
**கார்ல் மாக்ஸ்**

7) தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் பொதுச் செயலாளர் யார்?
**கோபிஅனான்**

8) இலங்கையின் இலவசக் கல்வி அறிமுகப் படுத்திய ஆண்டு எது?
**1945**

9) 'பாரதரட்ண' விருதைப் பெற்ற விடுதலை வீரர் யார்?
**மகாத்மா காந்தி**

10) 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் நடை பெறவுள்ள இடம் எது?
**லண்டன்**

11) ஆண் பெண் இல்லாத உயிரினம் யாது?
**நத்தை**

12) முதன்முதலில் போருக்கு விமானத்தை பயன்படுத்திய நாடு எது? எத்தனையாம் ஆண்டு?
**இத்தாலி, 1911 ஆம் ஆண்டு**

13) யுரேனஸ் கோள் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
**1781**

14) நின்றபடி தூங்கும் விலங்கு எது?
**குதிரை**

15) சதுரங்க நாடு எது?
**இந்தியா**

16) இறக்கை இல்லாத பறவை எது?
**சிபிப்பறவை**

17) போலியோ நோயை கண்டுபிடித்த நாடு எது?
**மலேசியா**

18) ஐஸ்கிறீம் கண்டு பிடித்த நாடு எது?
**சீனா**

19) மஞ்சல் ஆறு ஓடும் நாடு எது?
**சீனா**

20) ஆசியாவில் உள்ள ஒரே ஒரு கிறிஸ்தவ நாடு எது?
**பிலிப்பைன்ஸ்**

21) இலங்கையில் ஆட்சி செய்த முதல் அரசி யார்?
**அனுலா**

22) இலங்கையில் மக்கள் வங்கி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
**1961**

23) இலவசக் கல்வியின் தந்தை யார்?
**C.W.W. கன்னங்கரா**

24) இரண்டாம் உலகப் போரில் அதிகமாகப் பாவித்த வாயு எது?
**ஓட்மான் வாயு**

25) இலங்கையில் மகாவலித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பெரிய நீர்த் தேக்கம் எது?
**ரந்தெனிகல**

26) இலங்கையில் முதல் முதல் பெண்கள் பாடசாலை எது?
**யா/ உடுவில் மகளிர்கல்லூரி**

27) அதிக ஞாபகசக்தி கொண்ட மிருகம் எது?
**யானை**

28) இந்தியாவின் நுழைவாயில் எது?
**மும்பை**

29) உலகிலே மிகப் பெரிய நாடு யாது?
**ரஷ்யா**

30) இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றி யவர் யார்?
**ரவீந்திரநாத் தாகூர்**

**இ. கார்த்திகா**
**யா/ நாவற்குழி ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் குறிப்புகள்

1) கண்டியை ஆண்ட கடைசி மன்னன் - **ஸ்ரீவிக்கிரமஇராசசிங்கன்**
2) யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட கடைசி மன்னன் - **சங்கிலியன்**
3) இலங்கையின் முதலாவது மாநகரசபை - **கொழும்பு 1865 இல் நிறுவப்பட்டது.**
4) இலங்கையின் தேசிய காங்கிரஸ் 1919 இல் நிறுப்பட்டது. இதன் முதலாவது தலைவர் - **சேர் பொன் அருணாசலம்**
5) அரிசி பங்கீட்டு முறை நடைமுறைக்கு வந்தது - **1942**
6) சிவில் சேவை நீக்கப்பட்டு பரிபாலன சேவை நிறுவப்பட்ட ஆண்டு - **1963**
7) அரசாங்கம் போயா நாட்களை வாரவிடுமுறை நாட்களாகப் பிரகடனம் செய்தது - **1966**
8) இலங்கை தமிழரசுக் கட்சி நிறுவப்பட்டது - **1949 டிசம்பர் 18**
9) இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது - **1943 ஜூலை 03**
10) தாள் நாணங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு - **1885**
11) இலங்கையில் ரூபா சதக்குற்றி நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு - **1872**
12) முதன் முதலாக அமைக்கப்பட்ட புகையிரதப் பாதை **கொழும்பு -கண்டிப்புகையிரதப் பாதை**
13) சிங்கள இராச்சியத்தின் முதலாவது தலைநகரம் - **அநுராதபுரம்**
14) சிங்கள இராச்சியத்தின் இரண்டாவது தலைநகரம் - **பொலநறுவை**
15) இலங்கையை ஆண்டமுதல் போர்த்துக்கேயத் தளபதி - **அசவேடோ**
16) இலங்கையின் முதலாவது தமிழ்துறைப் பேராசிரியர் - **சுவாமி விபுலானந்தர்**
17) இலங்கையை ஆட்சி செய்த முதலாவது அரசி - **அனுலா**
18) கிராம சேவகர்கள் முறை அறிமுகமான ஆண்டு - **1963**
19) "மும்மணிகள்" எனப் போற்றப்படுபவை - **புத்தம், தர்மம், சங்கம்**
20) இலங்கையில் மிக நீளமான பாலம் - **வேலணைபுங்குடுதீவுப் பாலம் இது 03 மைல்கள் நீளமானது.**
21) இலங்கையின் புகழ்பூத்த குகை ஓவியங்கள் - **சிகிரியா, இந்தியாவில் - அஜந்தா**
22) இலங்கையின் முக்கியமான இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் - **திருகோணமலை**
23) ஐ.நா. சபையின் சர்வதேச நீதிமன்றத்தில் பணியாற்றிய இலங்கை நீதிபதியின் பெயர் - **வீரமந்திரி**
24) கல்விச் சீர்திருத்த வெள்ளையறிக்கை வெளியாகியது - **1980**
25) பள்ளிக்கூட விசுக்கோத்து நிகழ்ச்சித் திட்டம் தொடங்கியது - **1968**
26) ஈரானிய வெளிவிவகார அமைச்சர் - **கமால்கராசி**
27) சர்வதேச மகளிர் தினம் - **மார்ச் 08**
28) சர்வதேச குடிநீர் தினம் - **மார்ச் 22**
29) சர்வதேச நாடக தினம் - **மார்ச் 27**
30) சர்வதேச சுகாதார தினம் - **ஏப்ரல் 07**
31) சர்வதேச தொழிலாளர் தினம் - **மே 1**
32) எலி கடிப்பதால் உண்டாகும் நோய் - **பிளேக்**
33) வேதிப் பொருள்களின் அரசன் - **கந்தக அமிலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34) புகையிலையிலுள்ள நச்சுத்தன்மையான பொருள் - **நிக்கொட்டின்**

35) செயற்கை மழையைக் கண்டறிந்தவர் - **எப்லின்லாமு.**

36) தங்கத் தாத்தா என அழைக்கப்படுகின்ற ஈழத்துப்புலவர் - **நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**

37) ஈழத்தில் எழுந்த முதல் பள்ளுநூல் - **கதிரைமலைப்பள்ளு**

38) முதன் முதலில் வெளிவந்த அகராதி - **சதுர்அகராதி**

39) போகும் இடமெங்கும் கொண்டு சென்று நடமாடியவாறே உரையாடக் கூடிய தொலைபேசி - **செலுலார்**

40) முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் ஏறியவர் **எட்மண்ட் ஹிலாரி**

41) ஒரேயொரு இந்துமத நாடு - **நேபாளம்**

42) உலகின் மிகப் பழமையான விளையாட்டு - **போலோ (Polo)**

43) உலகின் அதிக வானொலி நிலையங்களைக் கொண்டுள்ள நாடு - **ஐக்கிய அமெரிக்கா**

44) அஞ்சல் அட்டை (Post Card) ஐ அறிமுகம் செய்து வைத்தநாடு - **அவுஸ்திரேலியா**

45) ஆறுகள் இல்லாத நாடு, சினிமா தியேட்டர்களே இல்லா நாடு -**சவுதிஅரேபியா**

46) பால்டிக் கடலையும், வடகடலையும் இணைப்பது - **கீல் (Heil) கால்வாய்**

47) உலகிற் கடற்கரை இல்லாத நாடுகள் - **26**

48) தன் வாழ்நாளில் ஒரேயொரு முறை பூக்கும் தாவரம் - **மோனாகாப்பிக்**

49) சீனப் பெருஞ்சுவரின் நீளம் - **1684 மைல்**

50) குடித்தொகைக் கல்வியின் தந்தை - **ஜோன்கிரான்ட்**

**சதாசிவம் - நிலூசிகா**
**ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்**

# CATS

Cats sleep any where any table any chair. Top of piano window – ledge In the middle on theebge open drawer, empty shoe Any body's lap will do, Fifted in a cardboard box in the cupboard with your frocks Any where they don't care cats sleep any where.

*Thank you*

***Name** S.Mathushanthini*
**St John Bosco School**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கவிஞனின் குமுறல்

**ஒரு பாடகன் தன் கதையைச் சொல்கிறான்**

**ஒரு பக்தன் தன் விருப்பமான தெய்வத்துடன் விவாதம் புரிகிறான்.**

**ஒரு கவிதை உள்ளம் இப்படி தனக்குள் எண்ணி குமுறுகிறது.**

நீ என்னோடு இருந்த போதெல்லாம் பூமி என் கால்களுக்குக் கீழே இருக்கிறதென்று மகிழ்ச்சி அடைந்தேன். இங்கே என்னருகில் நீ இல்லாத போதுதான் வானம் என் தலைக்கு மேலே இருக்கிறதே என்று வருத்தப்படுகிறேன். நீ இருந்த போது வாசல் வழியாக வந்து என்னை வருடிக்கொடுத்த காற்று இப்போது கொல்லைப்புற வழியாகக் குதித்தோடிப் போகிறது. உரத்துச் சொல்லப்படுகின்றது என் கவிதை. என்னை ஊமையாக்கிவிட்டது.

என் இரவுகளுக்குத் தெரியும் எப்படி
நான் உருகினேன் என்று
என் பகல்களுக்குத் தெரியும் எப்படி
நான் கருகினேன் என்று
கல்லூரி வாழ்க்கையில் கூட
நான் மாறு வேடம் கொண்டதில்லை
அதனால் தான் இவர்கள் போடும்
பொய்யான வேடத்தைப்
புரிந்துகொள்ள முடியவில்லை
ஆயிரம் நண்பர்களுக்கு மத்தியில்
இருக்கிறபோது கூட அநாதையாகி
விட்டது போல ஓர் உணர்வு உருவெடுக்கிறது
தனிமையை விரும்பினேன்
இப்போ தனிமையே வாழ்க்கையாக மாறிவிட்டது
வலியவலிய அழைத்துப் பேசும்
சொந்தங்கள் இப்போது என்
தலை தென்பட்டால் போதும்
தலைமறைவாகி விடுகிறார்கள்
சொந்தங்கள் சொந்தத்தின் மீது
நம்பிக்கையில்லாமல் வாழ்வதால்
இப்போது நானே என்மீது
நம்பிக்கையிழந்து கெண்டிருக்கிறேன்
நானொரு ரகசியமாய் வாழ்ந்திருந்தால்
ராஜாங்கம் கிடைத்திருக்கும்
திறந்த புத்தகமாக இருந்ததால்
தெருவில் கிடக்கிறேன்
ஒரு தீபத்தைப் போல எரியும் நான்
மயக்கம்தரும் இருட்டு என்னை
எதிரியாய்க் கருதி கட்டாயம்
அணைத்து விடுமாறு காற்றுக்குக்
கடிதம் போடுகின்றேன்.

நன்றி

**சி.மஜீவன்ராஜ்**
யா/ நாவற்குழி ம.வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை உள்ளம் படைத்த பாரதி

பாரதியார் புதிதாகத் தாம் இயற்றும் பாடல்களை முதன்முதலில் தன் மனைவியிடம்தான் படித்துக் காட்டுவார். அதன்பிறகு தன் தோழர்களிடம் படித்துக் காட்டுவார்.

தன்னுடைய ஐந்து வயதிலேயே தாயாரை இழந்துவிட்ட பாரதியார் பக்கத்து வீட்டிலிருந்த குழந்தைக்கு கிடைத்து வந்த தாயின் பாசம் தனக்கில்லையே என்று அடிக்கடி ஏங்குவாராம். பாரதியார் குழந்தை உள்ளம் பெற்றிருந்ததற்குக் காரணம் அவர் சிறு வயதிலேயே தன் தாயாரை இழந்து விட்டதுதான்.

எந்தப் பெண் குழந்தையைக் கண்டாலும் அதன் பெயரைச்சொல்லிக் கூப்பிடவே மாட்டார் 'அம்மா' என்றுதான் அழைப்பார்.

எங்கேனும் தாயற்ற பிள்ளையைக் கண்டு விட்டால் அதற்காக வருத்தமடைந்து அந்த இடத்திலேயே சற்று நேரம் நின்றுவிடுவாராம்.

**ச. அபிராமி**
*யா/ நாவற்குழி ம. வி*



## பொன்மொழிகள்

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது இதயத்தின் இசை
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது சக்தியின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் இரகசியம்
படிக்க நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் ஊற்று
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் அது மகிழ்ச்சிக்கு வழி
உழைக்க நேரம் ஒதுக்குங்கள் அது வெற்றியின் விலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்பாடும் சனசமூக நிலையமும்

ஒரு சமூகம் தான் உயர்ச்சி பெற்று, எழுச்சிபெற்று பல வழிகளிலும் நிறைவு கண்டு சமூக மேம்பாடுகாண வேண்டும் என்ற அவாவுடன் இருப்பதனை நாம் கண் கூடாக காணமுடிகிறது. அவ்வாறு விரும்பும் ஒரு சமூகம் மேம்பாடுகாண வேண்டுமாயின் அதற்கு கல்வி, கலாசாரம், பண்பாடு, பொரு ளாதாரம், அபிவிருத்தி விளையாட்டு, கலை, மனித உழைப்பு, சேவை என பலவகைப்பட்ட காரணிகள் அத்தியாவசியமாகின்றன.

இத்தனை காரணிகளாலும் தன்னி றைவு காணும் ஒரு சமூகத்தால் நிச்சயமாக மேம்பாடுடைய ஒரு சமூகமாக வளர்ச்சி கண்டு, உயர்ச்சி பெறும் ஒரு சமூகமாக மாறமுடியும். என்பது வெள்ளிடமலை யாழ்ப் பாணப் பாரம்பரியத்தையும், சமூகங்களையும் ஒப்பிட்டு நோக்குகையில் இவ்வாறான மாற்றங்களுடனும் வளர்ச்சிகளுடனும் கழகங் கள் மேம்பாடு கண்டிருப்பதனை நாம் நன்கு அவதானிக்க முடிகின்றது.

ஒரு சமூகம் மேம்பாட்டுடன் வளர்ச்சி பெற்று உயர்வுடன் மிளிர்வதற்கு சமூகம் சார்ந்த சனசமூக நிலையங்களின் சேவை யுடன்கூடிய பங்களிப்புக்கள் மிக அத்தியா வசியமானவையாக விளங்குவதையும் நாம் காணமுடிகிறது. சனசமூக நிலையங்கள் எனும்போது கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கலை இலக்கியப் பேரவை என்பனவும் அடங்கலாகவே கொள்ளப்படுகிறது.

இவ்வகையில் ஒரு சனசமூக நிலையம் தனது சேவை நோக்கில் சமூகத்திற்கு பத்திரிகை மூலமும் நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி மூலமும் எந்தத்தரத்திலுடைய மக்களுக்கும் வாசிக் கின்ற பழக்கத்தை ஏற்படுத்துகின்றது. அது போன்று இளைஞர்கள், யுவதிகளுக்கு விளையாட்டின் மூலம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை சிறுவயதிலிருந்தே பழக்கி உதவுகின்றது. இவ்வாறாக கலை, கலா சாரம்,பண்பாடு, சிரமதானம் சேவைநோக்கு என்பவற்றையும் சிறுவயதிலிருந்தே கற்பிக் கிறது. இதனால் பலதரப்பட்ட மக்களையும் வயது வேறுபாடோ அன்றி ஆண், பெண் வர்க்க பேதமின்றி, மத, சமூக பேதமின்றி சமூகத்தின் மக்களை ஒருகுடையின் கீழ் அணிதிரட்டித் தனது உன்னத சேவைகளால் மக்களைக் கவர்வதுடன் சமூக மேம்பாட்டில் உயர்ந்து நிற்பதையும் காண முடிகிறது.

**செல்வி. நவமணி செல்லையா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER AND ITS USES



People from every where talk about computers. Every nook and corner you find computer institutes, centres and printing presse. What is it doing?. and why is it so popular in this modern world? It is talked about like God. So what is a computer then?

Computer is a magnificent machine that has made a tremendous change in information technology. William Berk took the initiative but Charles Babage is called the father of this wonderful machine. At the beginning, the computer was designed to keep accounts only. Gradually experts tried to fit a lot of other gadjets to suit their needs. As a result, today the computer dominates in all the fields. In an office, today no one can imagine a day without computer, because the life style has changed to that extent. In developed countries, a computer is an inevitable house hold item.This itself proves how useful is this marvellous machine to mankind.

So, what are the uses of computer? In an office, or in a bank or in any establishment you can feed any number of pages in a handy disc and can carry easily from one place to another or even from country to country. So many century old books, papers and important documents are fed in a disc and are kept safely. In this computer era it serves as multi language type writers. A chartered accountant, a translator, a store of books, newspapers, a radio, a television, an audio, video gadject, a camera, a photo album etc. In developed countries it controls the space ships, satellites, air crafts and tube trains too. The computer games like chess, cards, driving and shooting entertain and give educational knowledge. It improves the brain power too. An artist can do his paintings without wasting paper, brush and paints. When painting. He never waste or spill a drop of paint. In surgery the laser operation is done with the help of this impressive machine.

The next step, if you have the internet web access you could read any book or any printed material from any library in the world. Sitting in your room just pressing some buttons in your magic machine the computer. The "E-commerce" enables you to see any goods you wish to buy. Cars, motor bikes, television, your textiles, books, even fruits, vegetables and groceries on your computer screen. You can select to suit your taste and can order them from your home. Within few hours your purchased goods will be delivered at your door. Hence, you can easily understand how useful is a computer in your home and office.

The only disadvantage of this marvelous machine is it increases unemployment because a computer can do any work thousand times faster than a man, very effectively and efficiently. As such any employer would like to reduce the number of men because once he pay for it is finished. But for a man he has to pay each month. Though the price of a computer is high. It is not a luxury because it enables us to get any amount of work done in a few seconds. In brief computer is a splendid item which anyone would love to possess.

*Thangaraja Nakkeeran*
*Jaffna Central College*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இலங்கையில் தோற்றம் பெற்ற தமிழ்ப் பத்திரிகைகள்

"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனும் திருவள்ளுவரின் பொன் வாக்கிற்கிணங்க நாம் ஒன்றைப் படித்தோமானால் படித்ததோடு மட்டும் நின்று விடாமல் அதன் படி ஒழுக வேண்டும். அதே போல் நாம் நம் நாட்டில் வரும் பத்திரிகைகளை படித்தல் வேண்டும். அதோடு மட்டும் நின்று விடாமல் அதில் கூறப்பட்டிருக்கும் நற் கருத்துக்களை மனதில் கொண்டு அதன்படி ஒழுக வேண்டும். இவ்வாறு மனிதனை நல்வழிப்படுத்த பல பத்திரிகைகள் நம் நாட்டில் வெளிவந்துள்ளன. அவற்றில் நம் நாட்டில் வெளிவந்த தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

மாணவர், இளையோர், முதியோர் ஆகிய எல்லோரும் வாசித்து தம் அறிவைப் பெருக்கி இவ்வுலகிலே நல்ல சமுதாயிகளாக வாழ வேண்டும் என்பதற்காக இலங்கையிலே முதற் தமிழ்ப் பத்திரிகையாக 1824ம் ஆண்டு **"உதயதாரகை"** என்னும் பத்திரிகை உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பிலே முதன் முதலில் உருவாகிய இப்பத்திரிகையானது இந்து சாசனம், கத்தோலிக்கப் பாதுகாவலர், முஸ்லீம் நேசன் எனும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. இது இந்துமதம், முஸ்லீம் மதம், கத்தோலிக்க மதம் போன்ற சமயம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்துவதாகக் காணப்பட்டது. இதில் இந்து சாசனம் எனும் பகுதியானது நாவலர் எனும் பெரியாரால் வரையப்பட்டிருந்தது. முஸ்லீம் நேசன் அஸம் லெப்பை எனும் பெரியாரால் எழுதப் பட்டிருந்தது. இவ்வாறு உதயதாரகை பத்திரிகையானது 1824 – 1829 வரை 5 வருடங்கள் நிலைத்திருந்தது.

அடுத்து உதயதாரகை எனும் பத்திரிகையைத் தொடர்ந்து 1831ம் ஆண்டு **"வீரகேசரி"** எனும் பத்திரிகை வெளிவந்தது. இப்பத்திரிகையானது கவிதை, கட்டுரை, சிறுகதை என இலக்கியத்திற்கு முதன்மை கொடுத்திருந்தது. இது 1831 – 1834 வரை 3 வருடங்களே நிலைத்திருந்தது. பின் தற்போது பலவித அறிவுசார் விடயங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கின்றது. வீரகேசரிப் பத்திரிகையைத் தொடர்ந்து **"ஈழகேசரி"** எனும் பத்திரிகை வெளிவந்தது. இதுவும் இலக்கியத்திற்கே முதன்மை கொடுத்து வரையப்பட்டிருந்தது.

இவற்றைத் தொடர்ந்து 1948ம் ஆண்டு அதாவது இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த அதே தினத்தில் **"சுதந்திரன்"** எனும் பத்திரிகை வெளிவந்தது. இது போராட்டங்களைச் சித்தரிப்பதாகவே அமைந்திருந்தது. இளைஞர் சமுதாயங்களைப் போராட்டத்தின் பால் ஈர்ப்பதாக அமைந்த இப்பத்திரிகை தமிழீழப் போராட்டங்களிலே தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரதீரச்செயல்களை கவிதை வடிவிலோ, சிறுகதை வடிவிலோ வெளிப் படுத்தி நின்றதோடு சிங்களப் பேரினவாதிகளின் தமிழின அடக்கு முறைகளை தெளிவாக எடுத்துக்காட்டியது. இவ்வாறு தமிழ்மக்களின் போராட்டங்களைச் சித்தரிக்கும் வகையில் கைலாசபதி என்பவரால் இப்பத்திரிகைக்குத் தடை விதிக்கப்பட்டது.

சுதந்திரன் பத்திரிகையைத் தொடர்ந்து 1960ம் ஆண்டு **"ஈழநாடு"** எனும் பத்திரிகை வெளிவந்தது. இப்பத்திரிகையானது இளம் சமுதாயத்தினை ஊக்குவிப்பதாகவே வரையப் பட்டது. அதாவது, அரசியல் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கவிதை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை போன்ற விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து 1985ம் ஆண்டு "**உதயன்**" எனும் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது. இது உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகளையும் விளம்பரங்களையும் கொண்டமைந்தது. அரசியல் விடயங்களுக்கும், சமூக விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்த இப்பத்திரிகை இன்றும் 39 வருடங்களாக வெளிவந்த வண்ணமுள்ளது.

உதயன் பத்திரிகையைத் தொடர்ந்து தினமுரசு, தினக்குரல், சுடர் ஒளி, வலம்புரி எனப் பல பத்திரிகைகள் வெளிவந்த வண்ணமுள்ளன. அரசியல் விடயங்கள் சிறுகதைகள், தொடர்கதைகள், கவிதைகள், சினிமா விடயங்கள் உட்பட பல சிறப்பம்சங்களுடன் தற்போது வெளிவந்து கொண்டுள்ளன. இவ்வாறு மானிட சமுதாயத்தை மேம்படுத்த பல தமிழ்ப் பத்திரிகைகள் தோற்றம் பெற்றமை மனித சமூகத்திற்குக் கிடைத்த மாபெரும் கொடையாகும்.

**இ. சுமித்தா**
யாழ். இந்து மகளிர் கல்லூரி

## சிந்திக்கச் சில

- பிறந்த நாட்டைப் பெற்றதாய்போல் நேசியுங்கள்
- "எம்மதமும் சம்மதம்" எல்லா மதத்தையும் நேசியுங்கள்
- ஏழைகளுக்கு உதவுங்கள் ஏற்றம் பெறுங்கள்
- உங்கள் பணிகளைத் நீங்களே செய்துகொள்ளுங்கள்

## மொழிகளின் சிறப்புப் பெயர்கள்

தமிழ் – பக்தி மொழி
பிரெஞ்சு – காதல் மொழி
ஆங்கிலம் – வணிக மொழி
கிரேக்கம் – சட்ட மொழி
இத்தாலி – இசை மொழி
உருது – கவிதை மொழி

**வி. சஜந்தன்**
**யா/ நாவற்குழி ம.வி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணினத்தின் பெருமை

பெண்ணாகப் பிறந்து விட்டால்
பெற்றவருக்குத் தொல்லை என்பர்
பெண் பிறவா விடிலோ
தாய்க்குப் பெண் பொருத்தம் இல்லை என்பர்



ஆணோடு அவள் கொஞ்சம்
அண்டியே பழகி விட்டால்
உதவாக் கரை என்று
ஒதுக்கியே வைத்திடுவர்

பெண் கொஞ்சம் துடிப்பாகப் பேசி
விட்டால் வாயாடி என்ற பெயர் வந்திடுமே அவளுக்கு

அன்று அடுப்பங்கரையிலே
அமிழ்ந்து கிடந்த பெண் அவள்
இன்று துணிவுடனே எழுந்து
தன் வேலைகளை ஆரம்பித்தாள்

தாதி சேவையைத் தன் சேவை எனக் கருதி
விளக்கேந்திய சீமாட்டி என்ற பெருமை பெற்றவள்
புளோறன்ஸ் நைற்றிங்கேல் அவளும் ஓர் பெண்தானே

ஏழை எளியோரை அரவணைத்து
ஏழைகளின் அன்னையாய் விளங்கி
இன்று புனிதர் பட்டம் பெற்றவர் – எம்
அன்னையாம் திரேசா அவளும் ஓர் பெண் தானே



விளையாட்டுத் துறையில் முதன்மை
வீராங்கனை என்று பெயர் பெற்றவர்
அன்று ஜான்சிராணி
அவளும் ஓர் பெண் தானே

தற்போது இந்த நாட்டைத் தன்
ஆட்சியில் கொண்டு நடத்துபவர்
சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க
அவளும் ஓர் பெண்தானே

பெண்ணினமே நீ சோர்ந்து போகாதே
மீண்டும் அடுப்பங் கரையை நாடிச்செல்லாது
படிக்கற்களைத் தாண்டி வீறு நடைபோடு

வாழ்க பெண்ணினம்
வளர்க பெண்குலம்

நன்றி

இ. அஜித்தா
யா/ நாவற்குழி ம.வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்காக அழுதான்...? (சிறுகதை)

'பளார்' என்ற ஒரு அறை விழவும் திவாகர் நிலை குலைந்து போனான். காதுக்குள் 'சொய்ங்' என்ற சத்தம் கேட்டது. தலை சுற்றுவதைப் போல் இருந்தது. கலங்கிய கண்களுடன் காவலர்களைப் பார்த்தான். அவர்கள் இதுவரை கேட்டிராத தூஷண வார்த்தைகளில் அவனையும் அவனோடு சேர்ந்த மற்றவர்களையும் ஏசினார்கள். அவர்களில் ஒரு காவலன் கையில் உருளைக் கட்டை போன்ற தடி இருந்தது. அந்தத் தடியினால் இடைக்கிடை ஒருவர் மாறி ஒருவருக்கு அடித்தான். வலி பொறுக்க முடியாமல் பலர் அலறினர். இன்னும் சிலர் துடிதுடித்துக் கீழே விழுந்தனர். சுமார் ஒரு மணி நேரம் இந்த சித்திரவதை நடந்தது. பின் அவர்கள் யாவரும் சிறிசிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஏற்கனவே இருந்தவர்களுடன் வெவ்வேறு குழுக்களாக வெவ்வேறு அறைகளில் அடைக்கப்பட்டார்கள். சிலநாள் நடக்கவும் முடியவில்லை. திவாகர் அடைக்கப்பட்ட அறையில் போதை வஸ்து பாவிக்கும் ஒருவனும் இருந்தான். அவன் பரட்டைத் தலையும் நீண்ட தாடியுடனும் இருந்தான். அடிக்கடி இருமிக் கொண்டிருந்தான். அவனது உடலி லிருந்து கெட்ட மணம் வீசியது.

திவாகருக்கு வாந்தி வரும் போல் இருந்தது. ஆனால் வாந்தி எடுத்தால் எதை எங்கே துப்புவது? அங்கே சிறுநீர் கழிப்பதற்கு மட்டும் ஒரேயொரு பானை இருந்தது. ஏற்கனவே அனைவருக்கும் சாப்பாடு கொடுத்து அறையினுள் பூட்டி விட்டிருந்தார்கள். இனி காலை ஏழு மணிக்குத்தான் திறந்து விடுவார்கள் திவாகர் அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டான். அவன் எப்படி இங்கு வந்தான், அவன் இங்கே வருமளவிற்கு என்ன குற்றம் செய்தான்?............ 'பிந்துனுவெவ' சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குப் பின் அவன் இருந்த நகரில் சில அசம்பாவிதங்கள் நடந்தன. திவாகர் பட்டதாரி ஆசிரியர். பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவன். அவனைத் தேடி நல்ல சந்தர்ப்பங்கள் வந்தன. வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கூட கிடைத்தது. அவன் கைநிறைய சம்பாதிக்கலாம், கார், பங்களா வாங்கியிருக்கலாம். ஆனால்......தான் கற்ற கல்வி தான் பிறந்து வளர்ந்த மக்களுக்கே பிரியோசனப்பட வேண்டும் என்று நினைத்தான். தன்னைத்தேடி வந்த நல்ல வாய்ப்புக்களை எல்லாம் உதறித் தள்ளினான். ஆசிரியர் தொழிலைத் தேர்ந்தெடுத்தான். இன்று மலையகத்திலிருந்தும் சிலர் படித்துப் பட்டம் பெறுமட்டும் 'சமூகம்' அது இதுவெனப் பேசுகின்றார்கள். ஆனால் படிப்பு முடிந்து நல்ல உத்தியோகம் கிடைத்தவுடன் ஏற்கனவே மேடையில் வாய்க்குவாய் பேசிய தன் சமூகத்தை மறந்து விடுகின்றார்கள். தான், தன் குடும்பம் என்ற ரீதியில் செயல்படத் தொடங்குகின்றார்கள். முன்னர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என நினைத்து சக மாணவர்களுடன் ஒற்றுமையாக இருந்தவர்கள் வெளியே வந்தவுடன் சாதி பேசுகின்றார்கள், சங்கம் வைக்கின்றார்கள். பிரிவினையைத் தோற்றுவிக்கின்றார்கள். ஆனால் திவாகர் இவர்களில் மாறுபட்டவனாக இருந்தான். சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க விரும்பினான். தன்னை வளர்த்த தன் சமூகத்திற்கு ஏணியாக இருக்க விரும்பினான். ஏழை, எளிய மாணவர்களுக்கு தோணியாக இருந்து அவர்களை கரை சேர்க்க விரும்பினான். வறிய மாணவர்களுக்காக இலவச ரியூசன் செய்தான்.

அவனுக்கு இரண்டு சகோதரிகள். மூத்த சகோதரிக்கு திருமணம் ஒன்று வந்தது. அவனுக்கும் பெண் பார்க்கப்பட்டது. இரண்டு திருமணங்களும் ஒரே நாளில் ஒரே மேடையில் செய்வதென தீர்மானிக்கப்பட்டது. அவன் கல்யாணக் கனவில் இருந்தான். அப்போதுதான் பிந்துனுவெவ சம்பவம் நடந்தது. மலையகமெங்கும் பதற்றம் நிலவியது. ஆங்காங்கே கடையடைப்பு, தீவைப்புச் சம்பவங்கள் நடைபெற்றன. அன்று பாடசாலை இல்லை. திவாகரிடம் ரியூசனுக்காக வந்த சில மாணவர்கள் தங்களின் வீடுகளிற்குப் போக முடியாமல் தடுமாறினார்கள். திவாகரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைப் பாதுகாப்பாக கொண்டு போய் விட தீர்மானித்தான். அவர்கள் டவுனுக்கு வந்த போது அங்கே ஒரே கலவரமாக இருந்தது. திவாகருக்கே அந்த சூழ்நிலை அச்சமூட்டுவதாக இருந்தது. எனினும், மிகுந்த சிரமத்துடன் அவர்களை தத்தமது வீடுகளில் விட்டுவிட்டு தனது வீட்டை நோக்கி வந்தான். அப்போது அவனது கிராமத்திலுள்ளவர்கள் சிலர் சத்தமிட்டவாறு அங்கும் இங்கும் சிதைந்து ஓடினார்கள். அவனுக்கு எதுவும் விளங்கவில்லை. மறுநாள் பொலிஸ் ஜீப்பில் ஏராளமான பொலிஸ் அந்த கிராமத்திற்கு வந்தார்கள். வீடுவீடாக வந்து குறிப்பிட்ட சிலரை கைது செய்தார்கள். அதில் திவாகரும் ஒருவன். திவாகருக்கு தான் எதற்கு கைது செய்யப்படுகிறேன் என்று விளங்கவில்லை. அவர்கள் அனைவரும் பொலிஸ் நிலையம் கொண்டு போகப்பட்டார்கள். அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. திவாகரும் சக கைதிகளும் கண்டி போகம்பர சிறைச்சாலைக்கு கொண்டு போகப்பட்டார்கள். அனைவரது கைகளிலும் கைவிலங்கு போடப்பட்டிருந்தன. இடைக்கிடை அவர்கள் தூஷண வார்த்தைகளால் ஏசப்பட்டார்கள். சிலர் நையப்புடைக்கப்பட்டார்கள்.

"ஏண்டா இந்தியாவிலிருந்து பிழைக்க வந்த நீங்க இங்கவுள்ள எங்கட ஆக்களோட கடைகளை எரிக்கிறீங்க. எங்கட ஆக்களுக்கு அடிக்கிறீங்க இல்லையா. இப்பகூட எங்களுக்கு உங்களையெல்லாம் எதுவும் செய்ய முடியும். கவனமாக இருங்க" திவாகர் பவ்வியமாகக் கேட்டான். "ஐயா சட்டப்படி நீங்க எதுவும் செய்யலாம். அதுல எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனா எதுவுமே செய்யாத என்னை எதற்கு கைது செய்தீங்க? நான் என்ன குற்றம் செய்தேன்?" அவ்வளவு தான் 'பளார்' என்று ஒரு அறை விழுந்தது. "நாங்க யாரையும் கைது செய்வோம். எங்களை யாரும் கேள்வி கேட்கக் கூடாது. இதெல்லாம் உங்களை கோட்டுக்கு கூப்பிட்டா அங்கே போய்ச் சொல்லு. நாங்கள் எங்க இஸ்டப்படி எது வேண்டுமானாலும் செய்வோம். உங்க தலைவர்மாரோ இல்ல ஆண்டவனே வந்தாக்கூட இங்க ஒண்ணும் செய்ய ஏலாது. இது எங்களோட இராட்சியம். இங்கே நாங்க வைச்சது தான் சட்டம். உங்களையெல்லாம் கட்டம் கட்டமாக இல்லாம ஆக்கிடுவோம். கவனம். உங்களோட சண்டித்தனத்தை காட்டணும்னா கப்பலேறி யாழ்ப்பாணம் போங்க" அதற்குப்பின் திவாகர் எதுவும் பேசவில்லை. அவர்கள் எப்போது அவசரகால சட்டத்தில் கைது செய்யப்பட்டார்களோ? இனி அவர்கள் எதுவும் பேச முடியாது.

அவசரகாலச் சட்டம் என்பது தமிழர்களின் காலைச் சுற்றிய விஷப்பாம்பு போன்றது. எப்போது கடிக்கும் என்று சொல்ல முடியாது. அது கடிக்காமலிருக்க வேண்டுமானால் துன்பங்களையெல்லாம் சகித்துக்கொண்டு அமைதியாக இருப்பதுதான் உத்தமம். இப்படிச் செய்யாத குற்றத்திற்காக பொய்யாக குற்றம் சுமத்தப்பட்ட சிலர் கிட்டத்தட்ட ஊமைகளாகி நடைப்பிணங்களாக உலவுகின்றனர். அவர்கள் பேசுவதில்லை. சிரிப்பதுமில்லை. எந்நேரமும் மண்ணையே நோக்கியிருக்கும் அவர்களது விழிகள். இடைக்கிடை கண்ணீர்த் துளிகளை துளிர்க்கும். அவனைப் போலவே அவசரகாலச் சட்டத்தினால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சியைச் சேர்ந்த வாசுவும் எந்நேரமும் அழுதவண்ணமே இருந்தான். அவனை கைது செய்யும் போது அவனது தந்தை இருதய நோய் காரணமாக அவசர சிகிச்சையில் சேர்க்கப்பட்டிருந்தாராம். அவனது தங்கைக்கு ஒரு மாதத்தில் திருமணம் நடக்க இருந்ததாம். இவன்தான் மூத்தவன். இவனது சம்பாத்தியத்தை நம்பித்தான் அவர்கள் இருந்தார்கள். இப்போது இவன் வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகின்றது. அவர்களுக்கு என்ன நடந்தது என்ற ஒரு விபரமும் தெரியாமல் பைத்தியக்காரன் மாதிரி சிறையில் வாடி வதங்கி கிடந்தான்.

திவாகர் சட்டென சிந்தனை கலைந்தான். இனி என்ன செய்வது? அவன் சகோதரியின் திருமண விடயம் என்னவாகும்? அவனின் எதிர்காலம் என்ன? அவனால் இனி வெளியே வர முடியுமா? சிந்தித்தான். நாட்கள் ஓடி மறைந்தது. அவனுக்கு அங்கு பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. சரியான சாப்பாடு இல்லை, குளியல் இல்லை, இடைக்கிடை காவலாளிகளின் ஏச்சுப் பேச்சு, எதிர்த்தால் அடி, உதை அவ்வளவும் தங்கு தடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்றிக் கிடைத்தது. சுமார் நான்கு மாதங்கள் ஓடின. அவர்கள் கோட்டுக்கு கொண்டு வரப் பட்டார்கள். யாரோ ஒரு திறமையான வக்கீல் அவர்களுக்காக வாதாடி பிணையில் வெளியே கொண்டு வந்தார். நான்கு மாதங்களிற்குப் பின் அவன் சுதந்திரக் காற்றைச் சுவாசித்தான். அவனைப் பார்க்க அவனது தந்தை வேலாயுதம் மட்டும் வந்திருந்தார்.

"அப்பா....., அம்மா தங்கச்சி யெல்லாம் நல்லா இருக்கிறாங்களா?" வேலாயுதம் வாயில் துண்டை வைத்துக் கொண்டு விம்மினார். உடல் மெலிந்து தாடி வளர்ந்து பைத்தியக்காரன் போல இருந்த அவனைப் பார்க்க அவரால் முடிய வில்லை......

"திவாகர்....என்னடா இது கோலம்... உனக்கு தகவல் சொல்லவோ..... உன்னைப் பார்க்கவோ விடமாட்டேன்னுண்டாங்க. நீ எங்கே என்ன செய்யுறன்னு எந்த விபரமும் தெரியாம போயிருச்சு. நம்மக்கிட்ட சந்தாப் பணத்தை மட்டும் சத்தமில்லாம வாங்கும் யூனியன்காரங்க விஷயம் கேள்விப்பட்டதும் சந்தடியில்லாம ஓடி ஒளிஞ்சிகிட்டாங்க. நீ போனதில் இருந்து அம்மா படுத்த படுக்கை யாகிட்டாங்க. சாப்பிடலை...... யார்க் கிட்டேயும் பேசலை. கடைசியிலே போன மாசம் இந்த உலகத்தை விட்டே போயிட்டாங்க. உன் பெரிய தங்கச்சியை நிச்சயம் பண்ணினவங்க இந்த சம்பந்தமே வேணாம்னுட்டு வேற இடத்திலே பேசி முடிச்சிட்டாங்க. உனக்கு பொண்ணு தரேன் னவங்களும் பின் வாங்கிட்டாங்க. நான் அந்தப் பொண்ணு மஞ்சுளாவை நேரில் போய்ப் பார்த்துப் பேசினேன். என் மகன் மேலே குற்றம் இல்லையெண்டு வாதாடி னேன். அதற்கு அந்தப் பெண் குற்றம் செய் தாரா இல்லையா என்று இப்ப பிரச்சினை இல்லை. பயங்கரவாதச் சட்டத்தில் கைது செஞ்சிருக்காங்க. நானும் ஒரு ஆசிரியை. பிற்காலத்தில் என்னையும் தொழிலையும் அது பாதிக்கும். திடீரென்று இவரை காரண மில்லாம கைது செய்வாங்க. எந்த நேரமும் அச்சத்துடன் தான் வாழணும். என்னை நிம்மதி யாக சந்தோசமான இடத்தில் கல்யாணம் முடிச்சு வைக்க அப்பா, அம்மா விரும்பறாங்க. அவங்க விருப்பம் நியாயம் தானே! உங்க ளுக்கே இப்படி ஒரு நிலமை வந்து உங்க மகளை இப்படிப்பட்ட ஒருவருக்கு கல்யாணம் பண்ணிவைக்க சம்மதிப்பீங்களா? என்று அந்தப் பொண்ணு என்னைத் திருப்பிக் கேட்டிச்சு. அது கேட்டது நியாயம் தானே!

எல்லாத்துக்கும் மேலா டிப்பார் மென்டில இருந்து லெட்டர் வந்திச்சு. பயங்கர வாத தடுப்பு சட்டத்தில நீ கைது செய்யப் பட்டிருக்கிறது. வழக்கு முடியும் மட்டும் உன்னை ஆசிரியத் தொழிலிருந்து இடை நிறுத்தி வைச்சிருக்காங்களாம்....... நான் திரும்பத் திரும்பச் சொன்னேன் தானே....... நமக்கு இந்த சேவை அது இதெல்லாம் வேணாம். கிடைச்ச நல்ல சந்தர்ப்பத்தை வச்சு முன்னேறப்பாருன்னு.......நீ கேட்கலை இப்ப உன் வாழ்க்கையே போயிடுச்சே...... இனி என்னடா செய்யப் போறே..... ஒரு குற்றமும் செய்யாம சேவை, சேவைன்னு இருந்தியே...இப்போ நாயை விட கேவலமா இருக்கிறே....நீ படிச்ச படிப்பு...... செஞ்ச வேலை எதுக்குமே அர்த்தமில்லாம போயி டுச்சே...இனி என்ன செய்யப் போறே......" அவர் சொல்லிக் கொண்டே போனார்.

திவாகர் சட்டென்று தரையில் சாய்ந்து "ஓவென்று சத்தமிட்டு அழுதான். அழுதுகொண்டே இருந்தான். அவனை வேடிக்கை பார்க்க கூட்டம் கூடியது. வேலாயுதம் தோளைத் தொட்டு உலுக்கி னார். எழுப்பப் பார்த்தார். ஆனால் அவன் அசையவில்லை. தலையில் அடித்துக் கொண்டு அழுதான். எதற்காக அழுகின்றான், யாருக்காக அழுகின்றான் என்பது தெரியாமல் அவன் அழுது கொண்டேயிருந்தான்."

[யாவும் கற்பனை]

*T.Mithila*
*Stanley College*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAVE THE ENVIRONMENT FROM POLLUTION

Clean environment is polluted by many factors like garbage, gases expelled from factories, vehicles, testing of nuclear bombs undersea polythene and insecticides. The air, water and soil get polluted by these factors. Many factories are situated in the town areas where people live congested. The garbage deposited, and the gases expelled from the factories pollute the air people get lung diseases by inhaling this polluted air. This is also dangerous to animals and birds living around factories. We can reduce this pollution by adopting advanced technologies. Almost all people use some type of vehicles. The fumes emitted by the vehicles pollute the air. The noise created by the heavy vehicles is not good for the health. We must try to reduce the noise level of heavy vehicles, and there by save the environment. Nowadays, the developed countries produce atomic bombs. They do their experiments under the sea or in deserts. This pollutes the sea water and the air. The animals in the sea, and the human beings are affected by this. We can save the environment by stopping or restricting the production of atomic bombs in the developed countries. The use of polythene is another important factor that causes pollution. The polythene will not easily decompose. It still remains in the ground and pollute the environ ment. Many countries have stopped or minimized using polythene. The air is polluted by the garbage found on the streets and around the houses. This is a fine breeding place for flies. We must put the garbage at the place reserved for it or we dig or burn it immediately. Many advanced countries recycle their garbage and eliminate pollution. Farmers use many modern ways to get good harvest from their crops. They use artificial fertilizers, insecticides and weedicides. These pollute the air and soil. These chemicals are very harmful to our health. We must try to use natural manures for the plants. The air and soil pollution can be reduced by avoiding the use of insecticides and weedicides we all should cooperate, so that we and our future generation can live happily in this world.

*J. Sujanthan*
*St. John's College*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

01. இரத்தத்திலே வளர்வது இரத்தம் இல்லாதது அது என்ன?
02. அழுத்தி அழுத்தி மிதித்தால் அலறித் துடித்து ஓடும் அது என்ன?
03. இந்த ஊரிலே அடிபட்டவன். அடுத்த ஊரிலே போய் சொல்லுவான். அது என்ன?
04. ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?
05. திரியில்லாத விளக்கு உலகெல்லாம் ஒளிர்கிறதாம். அது என்ன?
06. எம் அம்மா மேகம், அப்பா காற்று, மகன் ஓர் ஓடை, வானவில் போல் என் படுக்கை. நான் யார்?
07. விரலாலே பிறப்பேன். வீட்டினிலே சிரிப்பேன், புள்ளியாகத் தொடங்கி பூக்களாக மாறுவேன். நான் யார்?
08. செடிகளின் சிரிப்பு நான். கூந்தலின் நகையும் நான். நாசியின் நண்பன் நான். நான் யார்?
09. தாவி ஓடி வந்தாலும் தாகம் தீர்க்க மாட்டான். நான் யார்?
10. கிட்டத் தெரிவான். நெருங்க நெருங்க எட்டிப் போவான். அவன் யார்?

**விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **1. நகம்** | **2. சைக்கிள்** | **3. தந்தி** | **4. கண்ணீர்** | **5. சூரியன்** |
| **6. மழை** | **7. கோலம்** | **8. பூக்கள்** | **9. கடல்** | **10. நிழல்** |

# சிரிப்பின் இரகசியங்கள்

| | | |
|---|---|---|
| இருக்குமிடமெல்லாம் | சிரிப்பவன் | **கோமாளி** |
| இன்பத்தில் | சிரிப்பவன் | **ஏமாளி** |
| கண் பார்த்து | சிரிப்பவன் | **காரியவாதி** |
| காணாமல் | சிரிப்பவன் | **கஞ்சன்** |
| கற்பனையில் | சிரிப்பவன் | **கவிஞன்** |
| கோபத்தில் | சிரிப்பவன் | **சிந்தனையாளன்** |
| மோகத்தில் | சிரிப்பவன் | **வெறியன்** |
| கொடுக்கும் போது | சிரிப்பவன் | **சூழ்ச்சிக்காரன்** |
| நீதியோடு | சிரிப்பவன் | **அறிஞன்** |
| நிலைமறந்து | சிரிப்பவன் | **காதலன்** |
| மகிழ்ச்சியில் | சிரிப்பவன் | **மன்னன்** |
| அருளுக்குச் | சிரிப்பவன் | **ஆண்டி** |
| குழைந்து | சிரிப்பவன் | **தந்திரவாதி** |
| துன்பத்தில் | சிரிப்பவன் தான் | **மனிதன்** |

# சொல் என்னும் சொல்

| | | | |
|---|---|---|---|
| குழந்தை பேசும் சொல் | **மழலைச் சொல்** | பேச்சிற்கு சொல்லும் சொல் | **பேச்சுச் சொல்** |
| தாய் சொல்லும் சொல் | **அன்புச் சொல்** | இனிமை தரும் சொல் | **இனிமைச் சொல்** |
| எதிரி பேசும் சொல் | **வன்சொல்** | அன்பு உள்ள சொல் | **அன்புச் சொல்** |
| பேசக்கூடிய சொல் | **இன்சொல்** | பண்பு உள்ள சொல் | **பண்புச் சொல்** |
| ஒன்றிற்கு எதிரான சொல் | **எதிர்ச்சொல்** | பெயரைக் கூறும் சொல் | **பெயர்ச் சொல்** |
| ஒன்றிற்கு ஒத்திருக்கும் சொல் | **ஒத்தசொல்** | வினையைக் கூறும் சொல் | **வினைச்சொல்** |
| அன்பாய்ப் பேசும் சொல் | **அருமைச் சொல்** | மொழியைக் கூறும் சொல் | **மொழிச் சொல்** |
| வாயால் பேசும் சொல் | **வாய்ச்சொல்** | தமிழன் பேசும் சொல் | **தமிழ்ச் சொல்** |

*By: Sowmiya*

**J/ Navatkuli Maha Vidyalayam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் நீ வரவேண்டாம்

ஆழிப் பேரலையே
உனக்கேன்
இத்தனை கோபம்?
வேண்டா வெறுப்பாக
வெறித்து விட்டாயே



பிஞ்சு நெஞ்சங்களைப்
பிரித்து விட்டாயே
வஞ்சகம் இல்லாமல்
வசை போட்டு விட்டாயே

அள்ளித் தந்த நீயே
அள்ளிச் சென்று விட்டாயே
கடவுள் என்று கும்பிட்டோம் உன்னை
கை நீட்டி அடித்து விட்டாய் எம்மை

அழுத கண்ணீருடன்
அன்னம் தண்ணி இல்லாமல்
உறவுகளைத் தேடித்தேடி
ஊஞ்சலாடுது எம்மனம்

அன்றாடம் அல்லல்கள்
ஆங்காங்கே கதறல்கள்
காணாத உறவுகளை நினைத்து
கண்ணீர்க் குளம் வற்றி விட்டது



தாயே!
பலியெடுத்தது போதுமம்மா
விட்டுவிடு எம்மை
நிம்மதியாய்த் தூங்குகின்றோம்

எம் கற்பனைக் கோட்டையில்
மண்ணை அள்ளிப் போட்டுவிட்டாயே
தோப்பாக வாழ்ந்த எம்மை
தனிமரம் ஆக்கி விட்டாயே

நெஞ்சம் துடிக்குதம்மா
நெருப்பாய்க் கொதிக்குதம்மா
பஞ்சம் தீர்த்த கடல்தாயே - உனக்கு
நெஞ்சம் பொறுக்கலையோ?

உயிர் குடித்த பேரலையே
உன்பேர் சுனாமியாம்
உள் நொந்து கெஞ்சுகின்றோம்
இனியும் நீ வரவேண்டாம்

த. மைதிலி
யாழ். பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி (COMPUTER)

21ஆம் நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை நிறைவேற்றி வரும் பொருளாதாரமாக காணப்படுகிறது. அதில் தொழில் நுட்பமும், தொடர்பாடல் தொழில் நுட்பமும் சேர்ந்து தகவல்களைத் தயார் செய்து வழங்குவதும், சேமித்து வைப்பதுமான நடவடிக்கைகள் அடங்கியது. தகவல் தொழில் நுட்பமாகும். இதில் தற்பொழுது கணனி என்னும் பொறி பிரசித்தி பெற்று வருகின்றது. விசேடமாக பல்வேறு வகையான கணித்தல், ஒப்பிடல் போன்றவற்றை மிக விரைவாகவும் சரியாகவும் செய்து கொள்ளப் பயன்படுத்தப்படும் தன்னியக்கமான கருவி கணனி ஆகும். கணனி ஆனது உள்ளீடு செய்யும் தரவுகளை செய்முறைப்படுத்தி தகவலை வெளியீடாக வழங்கப்படும் ஒரு இயந்திர சக்தி ஆகும். தரவானது தகவலைத் தயாரித்துக் கொள்ளப்படும் உள்ளீடு தரவாகும். தகவலானது தரவுகளைப் பயன்படுத்தக்கூடிய வகையில் தயார் செய்யும் போது அது தகவல் ஆகும். இது தரவு செய்முறைப்படுத்தலின் வெளியீடாகும். சாதாரணமாக கணனி ஒன்றிலிருந்து சில நன்மைகளும் காணப்படுகின்றன. அவை

- ❖ விரைவாகக் கணிப்பீடு செய்யவும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யவும் உதவும்.
- ❖ செம்மைத் தன்மையானது.
- ❖ நம்பகத் தன்மையானது
- ❖ நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த சேவைகளைப் பெறக் கூடியது
- ❖ உயர்தரம் மிக்கது

கணனி சீரான ஒழுங்கில் அமைக்கப் பட்ட ஒரு செயற்திட்டத்தை சேமித்து வைக்கவும் இத்திட்டம் தொடர்ந்து செயற் பாடுகளைச் செய்யவும் வழிகாட்டியாக இருந்து குறிப்பிட்ட செயலைப் பூரணமாகச் செய்து முடிக்க உதவுகின்றது. அத்துடன் கணனி இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(1) **வன்பகுதி *(Hardware)***

கணனிப் பயன்பாட்டிற்கு அவசியமான பௌதீகத் தன்மை வாய்ந்த உபகரணங்கள்.

Eg: Monitor, CPU, Mouse

(2) **மென்பகுதி *(Software)***

கணனித் தொழிற்பாட்டிற்கும் கட்டுப் பாட்டிற்கும் அவசியமான செயற்திட்டங்கள் மென்பகுதியாகும்.

Eg: கணனியில் பயன்படுத்தப்படும் window 95/98/2000/2001/2003, msword, ms excel, ms access, ms power point போன்ற கணனிக் குறிப்புக்கள்.

கணனி வலையமைப்பு (Computer Net work) என்பது செய்தி பரிமாற்றம், தரவு, தகவல் பரிமாற்றம் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கணனிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தப்பட்டால் அதுவே கணனி வலையமைப்பு ஆகும். இது இரு பகுதிகளைக் கொண்டது.

1. **உள்ளக வலையமைப்பு** *(Local Area Net Work)*

தனிப்பட்ட தொடர்பாடல் தேவைகருதி தனிப்பட்ட கணனிகளும் தனிப்பட்ட வேலைத் தளங்களும் இணைக்கப்பட்டிருப்பதாகும்.

2. **பரந்த வலையமைப்பு** *(Wide Area Net Work)*

மிகப்பரந்த அளவிற்கு தூர இடத்தில் உள்ள கணனிகள் பலவும் வேலைத் தளங்கள் பலவும் தேசிய தொலைபேசி வலையமைப்பு மூலம் இணைக்கப்பட்டிருப்பதாகும்.

**ந. சர்மிளா**
ஸ்ரான்லிக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாதவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. அணுகுண்டு | - ஆட்டோ ஆன் | 09. ஐதரசன் | - கேவண்டிஸ் |
| 02. அணு அமைப்பு | - ருதர்போர்டு | 10. எலக்ரோன்கள் | - ஜே. ஜே. தொம்சன் |
| 03. அணுக் கொள்கை | - டால்டன் | 11. மின்குமிழ் | - எடிசன் |
| 04. அணு எண் | - மோலிலி | 12. மின்தடைவிதி | - ஓம் |
| 05. பூமியின் சுற்றளவு | - ஜீன் மிக்கர்டு | 13. புவி ஈர்ப்பு விசை | - நியூட்டன் |
| 06. மின்சாரம் | - ஓல்டா | 14. இடிதாங்கி | - பெஞ்சமின் ஃபிராங்கிளின் |
| 07. ஒட்சிசன் | - யோசப் பிறிட்சிலி | 15. சைக்கிள் | - மாக் மில்லன் |
| 08. நைதரசன் | - டோனியல் ரூதர் போர்டு | | |

**By: *Dilaksajiny***
J/ Navakuli M.V

# நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| இராமாயணம் (மூலம்) | - வான்மீகி |
| இராமாயணம்(தமிழ்) | - கம்பர் |
| பெரியபுராணம் | - சேக்கிழார் |
| மகாபாரதம் (மூலம்) | - விஜாசர் |
| மகாபாரதம் (தமிழ்) | - வில்லிபுத்தூரார் |
| திருவாசகம் | - மாணிக்கவாசகர் |
| தேம்பவாணி, ஒப்பிலக்கணம் | - வீரமுனிவர் |
| மகாவம்சம் | - மகாநாம |
| பாஞ்சாலிசபதம் | - சுப்பிரமணிய பாரதியார் |
| காஞ்சி புராணம் | - சிவஞானமுனிவர் |
| நற்சிந்தனை | - யோகர் சுவாமிகள் |
| நன்னூல் | - பவணந்தி முனிவர் |
| வெற்றிவேற்கை | - அதிவீரராம பாண்டிதர் |
| நல்வழி, நீதிநூல், ஆத்திசூடி | - ஒளவையார் |
| மனோன்மணியம் | - சுந்தரம்பிள்ளை |
| கீதாஞ்சலி | - இரவீந்திரநாத் தாகூர் |
| மணிமேகலை | - சீத்தலைச் சாத்தனார் |
| தொல்காப்பியம் | - தொல்காப்பியர் |
| சூடாமணி | - தோலாமொழித் தேவர் |
| திருப்புகழ் | - அருணகிரி நாதர் |
| போரும் சமாதானமும் | - லியோ ரோல்ஸ்றோய் |
| நளவெண்பா | - புகழேந்தி |
| அர்த்த சாஸ்திரம் | - கௌடில்யர் |
| ஆசிய ஜோதி | - எட்வின் அனால்ட் |
| சத்திய சோதனை | - மகாத்மகாந்தி |
| குடியாட்சி | - பிளேற்றோ |
| ஒரு உலகம் | - வேன்ட்ஸ் வில்கி |
| மூலதனம் | - கார்ல் மாக்ஸ் |
| சகுந்தலை வெண்பா | - க. நடேசபிள்ளை |
| இனியவை நாற்பது | - பூதஞ் சேந்தனார் |
| கீத கோவிந்தம் | - ஜெயதேவர் |

**வி. அஜந்தன்**
யா/ நாவற்குழி ம.வி

### சனசமூக வளர்ச்சிக்கு உதவியவர்கள்

| | |
|---|---|
| மரத்தளபாடங்கள் | - பாரதி விளையாட்டுக் கழகம் |
| பிளாஸ்ரிக் தளபாடங்கள் | - பத்மினி சிதம்பரநாதன் (பாராளுமன்ற உறுப்பினர்) |
| கட்டட திருத்த வேலை | - சுரேஸ் பிரேமச்சந்திரன் (பாராளுமன்ற உறுப்பினர்) |
| நூலக புத்தகங்கள் | - சி. அருள்மோகன் (ஜேர்மன்) |
| பிளாஸ்ரிக் கதிரைகள் | - தா. விஜீவா (நெதர்லாந்து) |
| சி. ரமேஸ் (லண்டன்) | - 5000/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலையங்களின் கணக்கீட்டு முறை
# Accounting Method of Community Centres

- ✓ அறிமுகம்
- ✓ சனசமூக நிலையம் பணத்தை / நிதியை பெறும் வழிகள்
- ✓ கணக்கு வைப்பு
- ✓ கொள்ளல் கொடுத்தல் கணக்கு
- ✓ வருமானச் செலவுக் கணக்கு
- ✓ திரண்ட நிதி
- ✓ ஐந்தொகை
- ✓ முடிவுரை

**அறிமுகம்** ***(Introduction)***

சமுதாயத்தில் இலாபத்தை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களும் சேவையை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களும் காணப்படுகின்றன. சேவையை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ❖ சனசமூக நிலையங்கள்
- ❖ ஐக்கிய நாணய சங்கம்
- ❖ விளையாட்டுக் கழகங்கள்
- ❖ பாடசாலைகளில் உள்ள மாணவ மன்றங்கள்
- ❖ இளைஞர், முதியோர், யுவதிகள் மன்றங்கள்
- ❖ அரச சார்பற்ற சேவை வழங்கும் நிறுவனங்கள்
- ❖ கலை இலக்கிய மன்றங்கள்
- ❖ பொழுது போக்குக் களரிகள்

இக்கட்டுரை சனசமூக நிலையத்திற்காக எழுதப்படுவதால் "சனசமூக நிலையங்களின் கணக்கீட்டுமுறை" பற்றி குறிப்பிட முனைகின்றேன். சனசமூக நிலையம் என்பது கலைகள், சமயம், அறிவியல், பொழுதுபோக்கு, விளையாட்டு, பத்திரிகை, சஞ்சிகை நூல்கள் மூலம் உலகத்தைப் புரிதல், சமுதாயத்தில் ஒற்றுமையைப் பேணுதல் என்பவற்றின் மூலம் எதிர்காலம் பிரகாசமாக்குவதற்காக சமுதாய அங்கத்தவர்களால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். ஆகவே இதற்காக சனசமூக நிலையங்கள்

- ❖ பத்திரிகை சஞ்சிகைகளை சமூகத்திற்கு வழங்குதல்
- ❖ நூல்களை வழங்குதல்
- ❖ கூட்டங்கள் கூடுதல்
- ❖ அறிவியல் போட்டிகளை நடத்துதல்
- ❖ விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்.
- ❖ பொது வேலைகளில் ஈடுபடுதல்.
- ❖ சமய விழாக்களைக் கொண்டாடுதல்.
- ❖ ஆண்டு விழாக்களைக் கொண்டாடுதல்.
- ❖ சஞ்சிகைகளை வெளியிடுதல்.
- ❖ பாலர் பாடசாலைகளை நடத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல செயற்பாடுகளை தங்கள் தங்கள் திறமைக்கும், தகுதிக்கும், ஒற்றுமைக்கும் அவர்கள் பலத்திற்கும் ஏற்ப நடத்தி வருகின்றது. இந்த வகையில் எமது பாரதி சனசமூக நிலையம் 60வது ஆண்டு விழாவையும் சஞ்சிகை வெளியீட்டையும் மேற்கொள்வதையிட்டு மிக மகிழ்ச்சி அடைவதுடன் இதனுடன் தொடர்புடைய நிர்வாக உறுப்பினர்களையும், அங்கத்தவர்களையும் குறிப்பாக இளைஞர்களையும் பாராட்டுகின்றேன்.

"பணம் இல்லாதவன் பிணம்" என்பார்கள். அத்துடன் எந்தச் செயற்பாட்டிற்கும் பணம் பக்கபலமாக அமைகின்றது என்பது எல்லோரும் அறிந்த விடயமாகின்றது. ஆகவே சனசமூக நிலைய செயற்பாட்டிற்கு பலதரப்பினரிடமிருந்து பணம் கிடைக்கின்றது. கிடைத்த பணம் பல வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது என்பதனால் இதனை எவ்வாறு கணக்கு வைத்தல் வேண்டும் என்பதை கணக்கீட்டை கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் இக்கட்டுரையை மிக்க மகிழ்ச்சியுடன் எழுதுகின்றேன்.

### சனசமூக நிலையங்கள் பணத்தை / நிதியை பெறும் வழிகள்

- ❖ அங்கத்தவர்களிடம் பெறப்படும் சந்தாப் பணம்
- ❖ உள்ளூர், வெளியூர்களில் இருந்து கிடைக்கும் நன்கொடைகள்.
- ❖ அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை
- ❖ அரச, உள்ளுராட்சி நிறுவனங்களின் உதவு தொகைகள்.
- ❖ கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகளை நடத்தல்.
- ❖ போட்டிகள் நடத்தல்.
- ❖ வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- ❖ சிற்றுண்டிச்சாலை, புத்தக நிலையங்களை நடத்தல்

### கணக்கு வைப்பு – Accounting

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளுக்குப் பணத்தை பல தரப்பினர் வழங்குவதால் அவர்கள் கணக்கு வைத்தலில் அக்கறைகாட்டுவர். ஆகவே இவர்களுக்கு தேவைப்படும் போது தேவையான தகவல்களை வழங்குவதற்கு கணக்குகளை ஒழுங்கான முறையில் பேண வேண்டியுள்ளது. இதற்காக பின்வரும் கணக்குகள் சனசமூக நிலையங்களின் பொருளாளரால் பராமரிக்கப்படுகின்றன. அவையாவன,

1) கொள்ளல் கொடுத்தல் கணக்கு
   (Receipts and Payments Account)

2) வருமானச் செலவுக் கணக்கு
   (Income and Expenditure Account)

3) ஐந்தொகை / நிலைவரவுக் கூற்று
   (Balance Sheet or Statement of Affairs)

### கொள்ளல் கொடுத்தல் கணக்கு
***(Receipts and Payments Account)***

சனசமூக நிலையங்களுக்குப் பணம் பல்வேறு வழிகளில் கிடைக்கும் போது அவற்றைக் கொள்ளல் என்றும் கிடைக்கப் பெற்ற பணத்தை பல தேவைகளுக்குப் பயன்படுத்துதல் கொடுத்தல் என்றும் குறிப்பிடப்படுகின்றது. கொள்ளல்களை வரவுப் பக்கத்திலும் கொடுத்தல்களை செலவுப் பக்கத்திலும் பதிவு செய்வதற்காகப் பயன்படும் கணக்கு கொள்ளல் கொடுத்தல் கணக்கு எனப் பெயர் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கணக்கில் பதிவுகள் நிர்வாக அங்கத்தவரில் ஒருவரான பொருளாளரால் மேற் கொள்ளப்படும். திகதி ஒழுங்கில் பதிவு செய்து ஒவ்வொரு மாத இறுதியிலும் மீதியை கண்டு கொண்டு கணக்காய்வாளரின் பரிசீலனைக்குப் பின்பு நிர்வாக சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டு சபையினால் முன்மொழிந்து வழிமொழியப்படும். ஒருவருட முடிவில் கணக்கின் சுருக்கம் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சரி, பிழைகள் கண்டறியப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்படும். மேலும் வங்கியுடன் நடைமுறைக் கணக்கை (Current Account) பேணி வந்தால் அது தொடர்பான வரவு, செலவுகளையும் இக்கணக்கில் சேர்த்துச் செய்யலாம். அல்லது அதனை பிறிதொரு கணக்காக இதே போல் பேணலாம்.

சனசமூக நிலைய யாப்பின் படியும், உள்ளூராட்சிமன்ற விதிகளுக்கும் அமைய குறிப்பிட்ட தொகைக்கு மேல் காசாக பொருளாளர் வைத்திருக்க முடியாது. மேலதிக தொகையை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்தல் வேண்டும் என்பதைப் பொருளாளர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். கொள்ளல் கொடுத்தல் கணக்கில் பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

- ஆரம்பத்தில் இருந்த காசு இருப்பு
- குறித்த காலத்தில் திரட்டிய காசு
- குறித்த காலத்தில் செலவு செய்த காசின் விபரம்
- குறித்த கால இறுதியில் உள்ள காசு இருப்பு

## உதாரணம்

நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தின் 2004ம் ஆண்டிற்கான கொள்ளல்கள், கொடுத்தல்களின் சுருக்கமான தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| 1.1.2004 இல் பொருளாளர் வசமிருந்த காசு | 3500.00 |
| சந்தாப் பணம் பெற்றது | 10800.00 |
| பத்திரிகைச் செலவு | 2500.00 |
| சஞ்சிகைச் செலவு | 2500.00 |
| கட்டிடம் திருத்தியது | 6000.00 |
| மைதானம் துப்பரவு செய்த தேநீர்ச் செலவு | 1200.00 |
| வெளியூர் நண்பர்களிடம் பெற்றது | 60000.00 |
| கதிரை வாங்கியது | 45000.00 |
| விளையாட்டுப் போட்டிச் செலவு | 3000.00 |
| வாணிவிழாச் செலவு | 2000.00 |
| கண்ணீர் அஞ்சலி அச்சடித்த செலவு | 1000.00 |
| வரவேற்புச் செலவு | 1500.00 |
| பழைய பத்திரிகை விற்பனை | 700.00 |
| ஆண்டுவிழாச் செலவு | 10000.00 |
| வேலைத்திட்ட வரவு | 50000.00 |
| வேலைத்திட்ட செலவு | 43500.00 |
| வறியமாணவர்களுக்கான கல்வி செலவு | 4500.00 |
| சுற்றுலாச் செலவு | 2000.00 |
| பாலர் பாடசாலை வருமானம் | 10000.00 |
| பாலர் பாடசாலை ஆசிரியர் சம்பளம் | 7000.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மின் கட்டணம் | 1000.00 |
| பல்வேறு செலவு | 750.00 |
| கதிரை வாடகை | 3000.00 |
| பொது, நிர்வாக சபை கூட்ட சிற்றுண்டி செலவு | 500.00 |
| புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களை கௌரவிப்பு | 2000.00 |
| பரிசுப் பொருள் செலவு | 6000.00 |
| அதிஷ்ட இலாபச் சீட்டு விற்பனை | 12500.00 |

கொள்ளல் கொடுத்தல் கணக்கை கீழ்வருமாறு தயாரிக்கலாம்

31.12.2004ல் முடிவடைந்த ஆண்டுக்கான நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீதி 1 – 1-2004 | 3500.00 | பத்திரிகை செலவு | 2500.00 |
| சந்தாப்பணம் பெற்றது | 10800.00 | சஞ்சிகை செலவு | 1000.00 |
| வெளியூர் நண்பர்களிடம் பெற்றது | 60000.00 | கட்டிடம் திருத்தியது | 6000.00 |
| பழைய பத்திரிகை விற்பனை | 700.00 | மைதானம் துப்பரவு செய்த தேநீர் செலவு | 1200.00 |
| வேலைத்திட்ட வரவு | 50000.00 | கதிரை வாங்கியது | 45000.00 |
| பாலர் பாடசாலை வருமானம் | 10000.00 | விளையாட்டுப் போட்டிச் செலவு | 3000.00 |
| கதிரை வாடகை வருமானம் | 3000.00 | வாணிவிழாச் செலவு | 2000.00 |
| அதிஷ்டலாப சீட்டு விற்பனை | 12500.00 | கண்ணீர் அஞ்சலி அச்சடித்த செலவு | 1000.00 |
| | | வரவேற்புச் செலவு | 1500.00 |
| | | ஆண்டுவிழாச் செலவு | 10000.00 |
| | | வேலைத்திட்டச் செலவு | 43500.00 |
| | | வறிய மாணவர் கல்விச் செலவு | 4500.00 |
| | | சுற்றுலாச் செலவு | 2000.00 |
| | | பாலர்பாடசாலை ஆசிரியர் சம்பளம் | 7000.00 |
| | | மின்கட்டணம் | 1000.00 |
| | | பல்வேறு செலவு | 750.00 |
| | | பொது, நிர்வாக சபைக் கூட்ட சிற்றுண்டிச் செலவு | 500.00 |
| | | வங்கியில் வைப்பு செய்தது | 8000.00 |
| | | புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு | 2000.00 |
| | | பரிசுப் பொருள் செலவு | 6000.00 |
| | | 31/12/04இல் மீதி | 2050.00 |
| | 150500.00 | | 150500.00 |

## வருமானச் செலவுக் கணக்கு

(Income and Expenditure Accounts)

குறித்த வருடத்தில் பெறப்பட்ட வருமானங்களையும் செய்யப்பட்ட செலவுகளையும் கொண்டு தயாரிக்கப்படும் கணக்காகும். இதில் கணக்கீட்டு முறையின்படி வருமானங்கள் செலவு பக்கத்திலும் செலவுகள் யாவும் வரவுப் பக்கத்திலும் பதிவு செய்யப்படும் இறுதியில் செலவிலும் மிஞ்சிய வருமானம் அல்லது வருமானத்திலும் மிஞ்சிய செலவு கணிக்கப்பட்டு கணக்காய்வாளரால் பரிசீலனை செய்யப்பட்டு வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணம்**

கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கு பயன்படுத்திய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த சனசமூக நிலையத்தின் வருமானச் செலவுக் கணக்கை பின்வருமாறு தயாரித்துக் கொள்ளலாம்.

31.12.2004ல் முடிவடைந்த ஆண்டுக்கான நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தின் வருமானச் செலவுக் கணக்கு.

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| பத்திரிகைச் செலவு | 2500.00 | சந்தாப் பணம் | 10800.00 |
| சஞ்சிகைச் செலவு | 1000.00 | வெளியூர் நண்பர்களிடம் பெற்றது | 60000.00 |
| கட்டிடம் திருத்தியது | 6000.00 | பழைய பத்திரிகை விற்பனை | 700.00 |
| மைதான துப்பரவு தேநீர் செலவு | 1200.00 | வேலைத்திட்ட வரவு | 50000.00 |
| விளையாட்டுப் போட்டி செலவு | 3000.00 | பாலர் பாடசாலை வருமானம் | 10000.00 |
| வாணிவிழா செலவு | 2000.00 | கதிரை வாடகை வருமானம் | 3000.00 |
| கண்ணீர்அஞ்சலி அச்சடித்தல் செலவு | 1000.00 | அதிஷ்ட இலாபச் சீட்டு விற்பனை | 12500.00 |
| வரவேற்பு செலவு | 1500.00 | | |
| காணிகட்டிடத் தேய்வு | 8500.00 | | |
| தளபாடத் தேய்வு | 1250.00 | | |
| ஆண்டுவிழாச் செலவு | 10000.00 | | |
| வேலைத்திட்டச் செலவு | 43500.00 | | |
| வறிய மாணவர் கல்விச் செலவு | 4500.00 | | |
| சுற்றுலாச் செலவு | 2000.00 | | |
| பாலர் பாடசாலை ஆசிரியர் சம்பளம் | 7000.00 | | |
| மின்கட்டணம் | 1000.00 | | |
| பல்வேறு செலவு | 750.00 | | |
| பொது, நிர்வாக சபை கூட்ட சிற்றுண்டிச் செலவு | 500.00 | | |
| புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு | 2000.00 | | |
| பரிசுப் பொருள் செலவு | 6000.00 | | |
| செலவிலும் கூடிய வருமானம் | 41800.00 | | |
| | 147000.00 | | 147000.00 |

## திரண்ட நிதி *(Accumalated Fund)*

சனசமூக நிலையங்களின் உடமையான சொத்துக்களுக்கும் கொடுக்க வேண்டிய பொறுப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடு திரண்ட நிதி எனப்படும்.

**திரண்ட நிதி = சொத்து – பொறுப்பு**

நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தின் 01.01.04ல் உள்ள நிதி நிலைமையை உதாரணமாக எடுத்துக் கொண்டால் திரண்ட நிதி கீழ்வருமாறு கணிக்கப்படும்.

| | |
|---|---|
| காணிகட்டிடம் | 170000.00 |
| தளபாடம் | 25000.00 |
| வங்கியில் உள்ள மீதி | 20000.00 |
| கையிருப்பில் உள்ள காசு | 3500.00 |
| திரண்ட நிதி | 218500.00 |

பொறுப்புக்கள் எவையும் இல்லை என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தொகை *(Balance Sheet)*

எந்தவொரு நிறுவனத்தினதும் குறித்த திகதியில் உள்ள சொத்துக்கள் பொறுப்புக்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கூற்று ஐந்தொகை எனப்படும்.

31.12.04 இல் உள்ளவாறான நாவற்குழி சனசமூக நிலையத்தின் ஐந்தொகை

| பொறுப்பு | தொகை | தொகை | சொத்து | கிரயம் | பெ.தேய்வு | மீதி |
|---|---|---|---|---|---|---|
| திரண்ட நிதி | | 218500 | **நிலையான சொத்து** | | | |
| செலவிலும் கூடிய வருமானம் | | 41800 | காணி கட்டிடம் | 170000 | 8500 | 161500 |
| | | | கதிரை | 45000 | - | 45000 |
| | | | தளபாடம் | 25000 | 1250 | 23750 |
| | | | | **240000** | **9750** | **230250** |
| | | | | | | |
| | | | **நடப்புச் சொத்து** | | | |
| | | | வங்கி மீதி | | 28000 | |
| | | | காசுமீதி | | 2050 | 30050 |
| | | **260300** | | | | **260300** |

### கவனிக்க வேண்டியவை

- ❖ காணிகட்டிடம், தளபாடம் என்பவற்று 5% தேய்வு கணிக்கப்பட்டு உள்ளது.
- ❖ கதிரை இவ்வருட இறுதியில் பெற்றதால் தேய்வு கணிக்கப்படவில்லை
- ❖ நாவற்குழி சனசமூகநிலையத்தின் 2004ம் ஆண்டின் மெய்யான தகவல்கள் அல்ல. உதாரணத்திற்காகவே நடவடிக்கைகளும் தொகைகளும் எடுக்கப்பட்டு உள்ளது.
- ❖ கட்டுரையின் சுருக்கம் காரணமாக பிரதான விடயங்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

### முடிவுரை

நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தால் வெளியிடப்படும் 60வது ஆண்டு விழாவை முன்னிட்ட இச்சஞ்சிகைக்கு இக்கட்டுரையை முழுமனத்துடன் எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் ஏனைய சனசமூக நிலையங்களுக்கும் வேறு சேவையை வழங்கும் அமைப்புகளும் இக்கணக்கீட்டு முறையைப் பின்பற்றுவதற்கு உசாத்துணையாக இருக்கும் என நம்பிக்கை கொள்கின்றேன்.

நன்றி.


**Reference**

1) *Frank Wood's – Business Accounting – 1 (Seventh Edition)*
2) *Advanced Accounts – Mc – Shukla – T.S. Grewal*
3) *Advanced Accounting – Unit – 3 (20.06.1996) Mr. G. Kalaichelvan*



**S. நித்தியானந்தராஜா (B.B.A)**
(ஆசிரியர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# RENNY

## DENTAL & OPTICAL SERVICE

**பல் கட்டிக் கொடுக்கப்படும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும். கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கப்படும்.**

இல. 540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**T.P: 222 3703.**

---

*With best compliments from*

## பிரவீன் தொலைத் தொடர்பு சேவை

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்

**உள்நாடு**

**021-2223524**
**021-2225961**
**021-4590332**

**வெளி நாடு**

**0094-212223524**
**0094-212225961**

---

*With best compliments from*

## வேல்முருகன் லோன்றி

## VEL MURUGAM LAUNDRY

உரிமையாளர்:
**எஸ். பரணி**

335, அரசடி றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# குறிஞ்சி றேடர்ஸ்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

*With best compliments from*

# ரேகா நகைத் தொழிலகம்





கேரதீவு றோட்,
நாவற்குழிச் சந்தி,
கைதடி.

*With best compliments from*

# சோஜிதா நகைத் தொழிலகம்



கேரதீவு றோட்,
நாவற்குழி, கைதடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

## கஜனி ஸ்ரோர்ஸ்

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

*With best compliments from*

## KANNAN FANCY HOUSE

## கண்ணன் அழகு மாடம்

சுண்ணாகம்.

*With best compliments from*

## சுவீற் ஹனி

## டிஜிட்டல் வீடியோ & போட்டோ

## SWEET HONEY

## DIGITAL VIDEO & PHOTO

போட்டோ அல்பம், டிசைனிங், வீடியோ எடிட்டிங் -
லமினேற்றிங் DVD, CD றைற்றிங்

18, கலைப்புலவர் லேன்,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 021 2227216
0777 775811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்.



எமது நிலையத்தின் செயற்பாட்டிற்கென அனைத்து வழிகளிலும் உதவிக்கரம் நீட்டிய அனைவருக்கும் எமது நன்றிகள். அதிஷ்ட இலாபச் சீட்டுக்களைப் பெற்று பண உதவி நல்கிய அனைருக்கும், நிலைய வளர்ச்சிக்குப் பொருளாகவும், பணமாகவும் உதவிய அன்பர்களிற்கும், கட்டட புனரமைப்பிற்கு உதவிய சுரேஸ் பிரேமச்சந்திரன் (பா.உ), தளபாடங்கள் தந்துதவிய பத்மினி சிதம்பர நாதன் (பா.உ) மற்றும் எமது சமூகத்தவரின் எண்ணங்களை நூலாக்குவதற்கு அனைத்து வழிகளிலும் உதவிய அன்பர்கள், நண் பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

**நன்றி.**

நிலைய நிர்வாக
உறுப்பினர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# நரேன் வீடியோ அன் போட்டோ

வீடியோ படம் பிடித்திடவும்,

கொம்பியூட்டர் முறையில்





மிக்சிங் செய்திடவும்;

போட்டோ எடுத்திடவும்

# NAREN VIDEO & PHOTO

நி.முகவரி:

நாவற்குழி, கைதடி

கிளை:

அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

T.P: 0777065635 / 0776258098

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org